
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
குருவே துணை
ஜென்னும் வேதாத்திரியமும்...
பாகம்- 5
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# ஜென்னும் வேதாத்திரியமும்

## பாகம் 5

## அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

### இதனுள்ளே


1. எண்ணமற்ற நிலை
2. எதிலும் மகிழ்ச்சி
3. துறவிக்கு கோமாளி கற்றுத்தந்த பாடம்!
4. மன அமைதி பெற
5. ஆடைக்காக மரியாதை9?
6. உழைத்து முன்னேறு
7. நன்மையே நோக்கு
8. அங்கிருந்து நுழை
9. ஜென்னும் தேநீரும்
10. மனோதிடம் வேண்டும்
11. இறைவனுக்கு பலி கொடுக்கலாமா?
12. அகங்காரம் போனால், மகிழ்ச்சி கிடைக்கும்!
13. பூட்டாத பூட்டு
14. அனுபவமே குரு
15. கற்றதும் பெற்றதும்
16. யார் சிறந்தவர்?
17. மழையாக பொழிந்த மலர்கள்
18. ஞானோதயத்தின் கதை
19. குரு பதவி
20. கை உணர்த்திய கதை
21. இந்த நாள் மீண்டும் வராது
22. வாழ்க்கை வாழ்வது எப்படி?
23. பேரலைகள்
24. ஒரு ஆசை ஒரு பாடம்
25. மனநிறைவாக வாழ என்ன செய்ய வேண்டும்?

26. மக்களா? சூத்திரமா?
27. அதிர்ச்சி இல்லாமலா?
28. ஞானம் பெறும் ஆர்வம்
29. தன்னை அறிதல்
30. இயல்பாய் இருத்தல்
31. யார் முன் நிற்கிறாய்?
32. நல்ஒழுக்கமும் நன்மையும்
33. எந்த வழியில் வந்தாலும்
34. இயற்கை அழகே அழகு
35. ஞானம் பெற்ற பின்
36. அச்சத்திற்கு என்ன காரணம்?
37. குருவின் அன்பு அடிப்பதா?
38. அழிப்பதுதான் வலிமையா?
39. கருவான நாதவிந்தில் சாதியேது?
40. வாழ்வினிலே வளம்காண
41. குரு நம்பிக்கை எதையும் செய்யும்

# 1. எண்ணமற்ற நிலை

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் மார்க்கம் என்ன?

ஜென் துறவியான ஜோஷு, தனது 60 வது வயதில் ஜென் மார்க்கம் குறித்து கற்க ஆரம்பித்தார். ஜென் மார்க்கம் என்ன?

தனது 80 வது வயது வரையிலும் ஜென்னை அவர் கற்றார்.

அப்போதுதான் அவரால் முழுமையாக ஜென் போதனைகளை கற்றுத் தேற முடிந்தது.

அதன் பிறகு தனது 130 வயது வரையில் அவர் ஜென் போதனைகளை மற்றவர்களுக்கு கற்று கொடுத்தார்.

ஒரு நாள் அவரது மாணவர் ஒருவர், எனது மனதை காலியாக வைத்துக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்.

அதற்கு ஜோஷூ, அதை வெளியே கொட்டி விடு என்றார். இதைக் கேட்ட அந்த மாணவர், எனது மனதில்தான் எதுவும் இல்லையே, பிறகு எப்படி நான் கொட்டுவது என்று கேட்டார்.

அதற்கு ஜோஷூ புன்னகையுடன், அப்படியானால் அதை வைத்துக் கொள் என்றார்.

### எண்ணத்தின் சிறப்பு – வேதாத்திரியம்

"எண்ணம்சொல், செயல்களெல்லாம் ஒன்றுக் கொன்று
இணைந்துள்ள தன்மையதைக் காணும் போது,
எண்ணமே அனைத்துக்கும் மூல மாகும்.
இன்பதுன்பம் விருப்பு வெறுப்பு உயர்வுதாழ்வு
எண்ணத்தின் நாடகமே. பிரபஞ்சத்தின்
இரகசியங்கள் அனைத்துக்கும் ஈதே பெட்டி.
எண்ணமே இல்லையெனில், ஏதுமில்லை.
எண்ணத்துக்கு கப்பாலும் ஒன்றுமில்லை."(ஞாக.பா.1531)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

## 2. எதிலும் மகிழ்ச்சி

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவி ஒருவர் குடிசை ஒன்றில் தங்கி இருந்தார்.

வழக்கம் போல அவர் சமைத்துக் கொண்டிருந்தார்.

அடுப்பில் இருந்த நெருப்புப் பொறி ஒன்று கூரையில் பட்டது.

கூரை திகு திகுவென்று தீப்பிடித்து எரியத் தொடங்கியது.

குடிசை எரிவதைப் பார்த்து அக்கம் பாக்கத்தில் இருந்தவர்கள் அங்கே ஓடி வந்தார்கள்...

அவர்களின் முயற்சியால் தீ அணைக்கப்பட்டது.

இருந்தும் குடிசை எரிந்து சாம்பலாகி விட்டது.

துறவியின் குடிசை சாம்பலாகி விட்டதே என்று அவர்கள் வருந்தினார்கள்.

"எல்லோர்க்கும் நல்லது செய்பவர் நீங்கள். உங்களுக்கு இப்படிப்பட்ட இழப்பு வந்திருக்கக் கூடாது என்றார்கள்.

புன்முறுவல் பூத்த துறவி "எனக்கு இழப்பு ஏற்பட்டதாக ஏன் நினைக்கிறீர்கள்?

இத்தனை நாட்களாக நிலவைப் பார்க்க முடியாமல் குடிசையின் கூரை மறைத்து இருந்தது. இனி நான் முழுமையாக நிலவைப் பார்த்து மகிழ்வேன்" என்றார்.

"இன்பத்தும் துன்பத்தும், இயற்கையும் கற்பனையும்
சிந்தித்து அறிபவன், சிறப்பாக வாழ்வான்.!" (ஞாக.பா.1542)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

## 3. துறவிக்கு கோமாளி கற்றுத்தந்த பாடம்!
### (ஜென்னும் வேதாத்திரியமும்)

'ஜென் என்பது ஓர் ஒழுங்கு முறை. அங்கே நம்பிக்கை அவசியமில்லாதது என ஒரு பிரபல வாசகம் உண்டு.

ஆங்கில இசையமைப்பாளரும் பாடகரும் பாடலாசிரியருமான டேவிட் சில்வியான் (▯▯▯▯▯ ▯▯▯▯▯▯▯) பல மேடைகளில் அதிகம் வலியுறுத்திய மேற்கோள் இது.

ஜென் தத்துவத்தை ஆழமாக உணர்ந்தவர்களால் மட்டுமே இதன் உண்மையான பொருளை அறிந்து கொள்ள முடியும்.

ஜென், யாரோ ஒருவர் கற்றுக்கொடுத்துத் தெரிந்து கொள்வதல்ல; அது ஆழ்ந்து உணரப்பட வேண்டியது.

ஜென் குருமார்கள் அதற்கான ஆன்மத் தேடலுக்கு வழி காட்டுகிறவர்களே தவிர, கற்றுக் கொடுப்பவர்கள் இல்லை.

முழுமையாக ஜென் பௌத்தத்தை உணர்ந்த ஒருவர் அடையும் இன்பத்துக்கு ஈடு வேறு இல்லை.

ஆனால், அதை நோக்கியப் பயணம் மிகக் கடினமானது. சற்றுத் தவறாகப் புரிந்துகொண்டாலும், ஜென்னை நோக்கியப் பயணத்திலிருந்து எளிதாக வழி தவறிவிடுவோம்.

அப்படி வழி தவறிய ஓர் இளம் ஜென் துறவியின் கதை இது.

சீனாவில் இருந்தார் அந்த இளம் துறவி. புத்த மதம் குறிப்பிடும் தர்மத்தை வெகு தீவிரமாக அனுசரிப்பவர்.

தர்மம் என்றால், ஒரு மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகள், உரிமைகள், சமூக விதிகள், நடத்தை... என எல்லாம் அடங்கும்.

புத்த மத ஒழுங்குகள் தனிச் சிறப்பானவை. அதிலும் அவர் துறவறம் பூண்டவர்.

எனவே அந்த இளம் வயதில் தன் வாழ்வியல் ஒழுங்குகளைச் சீராக அமைத்து கொண்டார்.

ஒருநாள் தன் குருவைப் பார்க்கப் சென்று கொண்டிருந்தார் அந்த இளம் துறவி.

வழியில் ஒன்றைக் கண்டார். அது என்ன என்பது இங்கே அவசியம் இல்லாதது.

அது, நவரத்தினக் கல்லாக இருக்கலாம், சாதாரண எருக்க இலையாகக் கூட இருக்கலாம்.

ஆனால், அது என்னவென்று அவருக்குத் தெரியவில்லை. இதுவரை அது மாதிரி ஒன்றை அவர் பார்த்ததில்லை.

அந்தப் பொருளைத் திரும்பத் திரும்பப் பார்த்தார். நடுக்கத்தோடு லேசாகத் தொட்டுப் பார்த்தார்.

அதற்கு முன்னர் எங்கேயாவது இதைப் பார்த்திருக்கிறோமா என தன் நினைவுகளைப் பின்னோக்கி நகர்த்திப் பார்த்தார். ஒன்றும் புரிபடவில்லை.

அதைக் கையோடு எடுத்துச் செல்லவும் அவருக்குத் தயக்கமாக இருந்தது. அவர் துறவி,

இது யாருடையதோ! எனவே அதை அப்படியே விட்டு விட்டு, தன் குருவைத் தேடிப் போனார்.

குருவின் இருப்பிடத்துக்கு வந்து அவரை வணங்கினார் இளம் துறவி. பிறகு குருவுக்கு முன்பாக அமர்ந்தார்.

“குருவே... நான் வரும் வழியில் ஒரு பொருளைப் பார்த்தேன்...”

“ம்...”

“ஆனால், அது என்னவென்று தெரியவில்லை.”

``அதை எடுத்து வந்திருக்கிறாயா?’ ’

``இல்லை குருவே...''

`அப்படியானால், அது என்னவென்று எப்படி நான் உனக்குப் புரியவைப்பது?''

இளம் துறவி யோசித்தார். பிறகு, தான் பார்த்ததை எந்தெந்த வழிகளில் விளக்க முடியுமோ, அப்படியெல்லாம் வர்ணித்து குருவுக்குப் புரிய வைக்கப் பார்த்தார்.

எவ்வளவு முயன்றும் அவரால், குருவுக்கு அது எப்படி இருக்கும் என்பதை விளங்க வைக்கவே முடியவில்லை.

திடீரென்று ஜென் குரு எழுந்தார். தன் சீடனைப் பார்த்து சத்தம் போட்டு சிரிக்க ஆரம்பித்தார்.

எந்தப் பதிலையும் சொல்லாமல் அவர் பாட்டுக்கு எழுந்து சிரித்துக்கொண்டே வெளியே போய்விட்டார்.

இளம் துறவிக்கு குரு ஏன் சிரித்தார் என்பது புரியவில்லை. அவர் மனம் சங்கடப்பட்டது.

குரு, சிரித்த காரணம் என்னவென்று தெரியாமல் வருத்தத்தோடு தன் இருப்பிடம் திரும்பினார்.

வீட்டில் இளம் துறவியால் நிம்மதியாகவே இருக்க முடியவில்லை. `குரு ஏன் சிரித்தார்... என்ன காரணம்... நான் என்ன தவறு செய்தேன்... அந்தப் பொருளை வர்ணித்ததில் ஏதாவது தவறு இருந்திருக்குமோ... இப்படி ஏகப்பட்ட குழப்பங்கள்.

அடுத்த மூன்று நாள்களுக்கு இளம் துறவியால் சரியாகச் சாப்பிட முடியவில்லை. தூங்க முடியவில்லை. எதையும் சரியாக யோசிக்கக்கூட முடியவில்லை. நான்காம் நாள் குருவைத் தேடி வந்தார் இளம் துறவி.

துறவியின் முகம் வாட்டத்தோடு இருந்ததை, பார்த்ததுமே உணர்ந்து கொண்டார் ஜென் குரு. என்ன காரணம் என்று விசாரித்தார்.

“அன்று நீங்கள் என்னைப் பார்த்துச் சிரித்தீர்கள். காரணம் எதுவும் சொல்லாமல் சிரித்தபடி வெளியேறி விட்டீர்கள். அதனால் என் மனம் சஞ்சலம் அடைந்தது. காரணம் புரியாமல் நான் கடந்த மூன்று நாள்களாக பெரும் துன்பப்பட்டேன்...’’

இதைக் கேட்டதும் குரு சொன்னார்... ``துறவியே உனக்கு என்ன பிரச்னை என்று உனக்குப் புரிகிறதா? நீ ஒரு கோமாளியை விடக் கீழானவன். அதுதான் உன் பிரச்னை.’’

இளம் துறவி அதிர்ச்சியடைந்தார். இப்படி ஒரு திட்டு குருவிடம் இருந்து வரும் என அவர் எதிர்பார்த்திருக்கவில்லை.

`மரியாதைக்குரிய குருவே... நீங்கள் சொல்வது என்னை மிகவும் வருத்தப்பட வைக்கிறது. எந்த விதத்தில் நான் ஒரு கோமாளியை விடத் தாழ்ந்தவன்?’’

“ஒரு கோமாளி மற்றவர்கள் சிரிப்பதை அனுபவித்து ரசிக்கிறான். உனக்கோ, மற்றவர்கள் சிரிப்பது தொந்தரவாக இருக்கிறது. அப்படியானால், நீ ஒரு கோமாளியை விடத் தாழ்ந்தவன்தானே?”

குருவின் பதிலைக் கேட்டதும் இளம் துறவி சிரிக்க ஆரம்பித்தார். கட்டுக்கடங்காத, நிறைவான சிரிப்பு. அவர் ஞானம் அடைந்து விட்டதை அந்தச் சிரிப்பு உணர்த்தியது.

## ஞான ஒளி – வேதாத்திரியம்

“தன்முனைப்பு நீங்கஒரு குரு அடைந்து,
தவம் ஆற்றும் சாதனையால் உயரும்போது,
நன்முனைப்பாம் அருட்தொண்டால், பயன்காண் போர்கள்,
நாதழுக்கப் பெருமையோடு போற்று வார்கள்!
உன்முனைப்பு நிலவுஒளி ரவியால் போல,

உயர்குருவின் ஒளிஎன்றே உணர்ந்து அடங்கு!
“என்ஒளியே சிந்ததினி ரவிஒளி ஏன்
எனக்கு?” என்று நிலவு எண்ண, இருளே மிஞ்சம்!” (ஞாக.பா.1369)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 4. மன அமைதி பெற
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒருமுறை புத்தர் தன்னுடைய சீடர்களுடன் பயணப் பட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு ஏரியை எதிர் கொண்டபோது, அங்கிருந்த பெரிய ஆலமர நிழலில் அனைவரும் சற்று ஓய்வெடுக்கும் எண்ணத்துடன் தங்கினார்கள்.

புத்தர் தன்னுடைய சீடர்களில் ஒருவரை அனுப்பி ஏரியில் இருந்து குடிப்பதற்கு நீர் கொண்டு வரச் சொன்னார்.

சீடரும் தங்களிடம் இருந்த பானை ஒன்றை எடுத்துக் கொண்டு நீர் நிலையை நோக்கி நடந்தார்.

அந்த நேரத்தில், மாட்டு வண்டிக்காரர் ஒருவர், ஏரிக்குள் இறங்கி ஏரியைக் கடந்து சென்றார். ஏரி கலங்கி விட்டது.

அத்துடன் ஏரியின் கீழ்ப் பகுதியில் இருந்த சேறும் சகதியும் மேலே வந்து நீரை அசுத்தப் படுத்தி பார்ப்பதற்கே உபயோகமற்றதாகக் காட்சியளித்தது.

இந்தக் கலங்கிய நீர் எப்படிக் குடிப்பதற்குப் பயன்படும்? இதை எப்படிக் குருவிற்குக் கொண்டு போய்க் கொடுப்பது? என்று தண்ணீரில்லாமல் திரும்பிவிட்டார்.

அத்துடன் தன் குருவிடமும் அதைத் தெரிவித்தார்.

ஒரு மணி நேரம் சென்ற பிறகு, புத்தர் தன்னுடைய சீடரை மீண்டும் ஏரிக்குச் சென்று வரப் பணித்தார்.

நீர் நிலையருகே சென்று சீடன் பார்த்தான். இப்போது நீர் தெளிந்திருந்தது. சகதி நீரின் அடியிற்சென்று பதிந்திருந்தது.

ஒரு பானையின் தண்ணீரை முகர்ந்து கொண்டு சீடன் புத்தரிடம் திரும்பினான். புத்தர் தண்ணீரைப் பார்த்தார். சீடனையும் பார்த்தார்.

பிறகு மெல்லிய குரலில் சொல்லலானார்.

தண்ணீர் சுத்தமாவதற்கு என்ன செய்தாய்?

நான் ஒன்றும் செய்யவில்லை சுவாமி! அதை அப்படியே விட்டுவிட்டு வந்தேன். அது தானாகவே சுத்தமாயிற்று!

நீ அதை அதன் போக்கிலேயே விட்டாய். அது தானாகவே சுத்தமாயிற்று. அத்துடன் உனக்கு தெளிந்த நீரும் கிடைத்தது இல்லையா?

ஆமாம் சுவாமி!

நம் மனமும் அப்படிப்பட்டதுதான்..

மனம் குழப்பத்தில் இருக்கும்போது நாம் ஒன்றும் செய்ய வேண்டாம். அதை அப்படியே விட்டு விட வேண்டும்.

சிறிது கால அவகாசம் கொடுக்க வேண்டும். அது தனக்குத்தானே சரியாகிவிடும். நாம் எந்தவித முயற்சியும் செய்ய வேண்டாம்.

மனதை சமாதானப் படுத்தும் விதத்தைப் பற்றி சிந்திக்கவும் வேண்டாம். அது அமைதியாகிவிடும். அது தன்னிச்சையாக நடக்கும். அத்துடன் நம்முடைய முயற்சியின்றி அது நடக்கும்.

மன அமைதி என்பது இயலாத செயல் அல்ல!
இயலும் செயலே! அதற்கு நம் பங்கு எதுவும் தேவை இல்லை

## மன அமைதி பெற – வேதாத்திரியம்

"மனது ஒருமைப் பேற்றால் மயக்கமறும். உண்மை ஒளி
தனது நிலையை விளக்கும் சமுதாயம் அற நெறியால்
புனித மடையும். உலகும் போர் ஒழிந்து அமைதி பெறும்.
உனது அறிவை, உயிரை, உண்மையினை உணர்ந்தமைவாய்."
(மாக்கோலம் பக்.137)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 5.ஆடைக்கா மரியாதை?

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒருமுறை இக்கியு என்கிற ஜென் துறவியை பணக்கார வாடிக்கையாளர்களில் ஒருவன் விருந்துக்கு அழைத்தான்.

ஆகவே இக்கியு தான் வழக்கமாக அணியும் உடையில் அந்த விருந்துக்கு சென்றார்.

அப்போது அங்கு வெளியில் இருந்த பணக்காரன், அவரை துரத்தி அனுப்பினான்.

பின்னர் ஜென் துறவி மீண்டும் வீட்டுக்கு சென்று, ஊதா வண்ணத்தில் பட்டு உடையை அணிந்து, அந்த பணக்காரன் வீட்டின் விருந்துக்கு சென்றார்.

அதுமட்டுமல்லாமல், அழகான மேலங்கியை மேலே போர்த்தி சென்றார்.

இம்முறை இக்கியுவை மிகுந்த மரியாதையுடன், அந்த பணக்காரன் பெரு விருந்துக்கு வரவேற்று அவரை ஒரு இருக்கையில் அமர்த்தினான். அந்த பணக்காரன்.

இக்கியுவை அழகான மேலங்கியுடன் காணப்பட்டதின் காரணமாக, அவரை மரியாதையுடன் வரவேற்றதால். இக்கியு அந்த உடையை கழற்றி இருக்கையில் வைத்து விட்டு "நீங்கள் இந்த உடையை மட்டுமே விரும்பினீர் என நினைக்கிறேன். ஏனெனில் நான் சாதாரண உடையில் வந்த போது என்னை துரத்தி விரட்டினீர்" என்று சொல்லி அங்கிருந்து கிளம்பினார்.

ஆகவே நாம் ஒருவரை விருந்துக்கு அழைக்கும் போது, அவரின் மேல் அலங்காரத்தை வைத்து எடை போடாமல், அவர் மனதை புரிந்து சிறப்போடு வரவேற்பதே சிறந்த பண்பு.

மேலும் அன்போடும் பண்போடும் நடந்தால் எத்தனை மேன்மையானவர்களின் அன்பையும் எளிதில் பெறலாம் என்பதை இந்த கதை நன்கு கூறுகிறது.

## அன்பு வழியில் இன்பம் பெருகும் – வேதாத்திரியம்

"இயற்கையாக அமைந்துள்ள உடல் பலத்தை
இரும்புமுதல் பலவிதமாய் உலோகத் தாலாம்
செயற்கைக் கருவிகளின் மூலம் பெருக்கிக் கொண்டு
சிந்தனையில் அவரவர்கள் உயர்ந்த மட்டில்,
பயிற்சியினால் ஒருவர்பலர் வாழ்வின் ஊடே
பாதகம், சாதகம் விளைக்கும் ஆற்றல் பெற்றோம்.
முயற்சியோடு மனிதஇனம் ஒன்றாய் என்றும்
முறையுடனே வாழஅன்பு வழியில் நிற்போம்." (ஞாக.பா.523)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 6. உழைத்து முன்னேறு

### (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஏழை ஒருவன் ஜென் துறவியைப் பார்க்கச் சென்றான்.

அவரைப் பார்த்து, "குருவே! நான் பெரும் ஏழை. என்னிடம் என் உயிரைத் தவிர வேறு எந்த சொத்தும் இல்லை. நான் ஒரு நல்ல வசதியுடன் வாழ வழி சொல்லுங்கள்" என்று கேட்டான்.

அதற்கு குரு அவனிடம் "நான் 5000 ரூபாய் தருகிறேன், உன் கைகளை என்னிடம் வெட்டிக் கொடு" என்று சொன்னார்.

அவன் என்னால் 5000 ரூபாய்க்காக என் கைகளை இழக்க முடியாது என்று கூறினான்.

"சரி, நான் உனக்கு 15,000 ரூபாய் தருகிறேன், உன் கால்களை கொடு" என்றார். அதற்கும் அவன் ஒப்புக் கொள்ளவில்லை.

"வேண்டுமென்றால் 50,000 ரூபாய் தருகிறேன், உன் கண்களையாவது கொடு" என்று கேட்டார். அதற்கும் அவன் முடியாது என்றான்.

உனக்கு இருபது லட்சம் வேண்டுமென்றாலும் தருகிறேன், உன் உயிரைக் கொடு என்றார்.

அதற்கு அந்த ஏழை, என்னால் நிச்சயம் நீங்கள் சொல்வதை செய்ய முடியாது என்று கூறினான்.

அதைக் கேட்ட அந்த குரு அவனிடம், "உன்னிடம் உன் உயிரைத் தவிர வேறு எந்த சொத்தும் இல்லை, மேலும் எவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்தாலும் கொடுக்க விரும்பாத விலை மதிப்பற்ற

உயிரை கொண்டுள்ள நீ எவ்வாறு ஏழை ஆக முடியும். ஆகவே உழைத்து முன்னேறு" என்று கூறினார்.

## பொது உடமையும் கட்டாய உழைப்பும்

"பொருள் கொடுத்து பொருள் வாங்கும் முறை ஒன்றின்றேல்,
பொது உடமை எப்பொருளும் மனிதருக்கு.
பொருள் பெருக்க, சேமிக்க, .நிரவிக்கொள்ள,
பொருத்தமுள்ள கட்டாய உழைப்பு வேண்டும்.
பொருட்கள், மனிதர், அறிவு, அனுபோகங்கள்,
பூவுலகத் தத்துவமும் அழ்ந்தறிந்து
பொருள்கள் பெற, அனுபவிக்க, உலகோர்க்கெல்லாம்,
பொறுப்பான பொதுத் திட்டம் அமைத்துக் கொள்வோம்." (உலக சமாதானம் 107)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 7. நன்மையே நோக்கு

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஊரில் ஜென் மாஸ்டர் தன் சீடர்களோடு மடத்தில் வாழ்ந்து வந்தார்.

அப்போது ஒருவர் மாஸ்டரை பார்க்க வந்தார். அவர் மாஸ்டரிடம் "குரு, நான் உங்கள் சீடனைப் பற்றி ஒரு முக்கியமான விஷயத்தை சொல்வதற்காக வந்துள்ளளேன்" என்று கூறினார்.

அதற்கு அந்த குரு அவரிடம், "முதலில் நான் கேட்கும் மூன்று கேள்விகளுக்கு பதிலளியுங்கள்" என்று கூறினார்.

அவரும் "சரி!" என்று கூறினார். அப்போது குரு அவரிடம் முதல் கேள்வியாக "நீங்கள் சொல்லும் விஷயம் உங்களுக்கு முன்பு

நடந்ததா?” என்று கேட்டார். அதற்கு அவர் “இல்லை” என்று கூறினார்.

பின் இரண்டாவது கேள்வியாக “இப்போது சொல்லப் போகும் விஷயம் நல்லதா? கெட்டதா?” என்று கேட்டார். அவர் “கெட்டது” என்று பதிலளித்தார்.

மூன்றாவதாக அவரிடம் “நீங்கள் சொல்லும் விஷயத்தை கேட்பதால், எனக்கு லாபமா? நஷ்டமா?” என்று வினாவினார்.

“அப்படி எதுவுமே இல்லை குருவே” என்றார்.

பின் குரு அவரிடம் “நீங்கள் சொல்லும் விஷயம் உண்மையா பொய்யா என்பதும் தெரியாது, கேட்காமல் நான் இருந்தால், எனக்கு எந்த நஷ்டமும் இல்லை, சொல்லப் போகும் விஷயம் வேறு கெட்டது, பின் எதற்கு நான் கேட்க வேண்டும்” என்று கேட்டு, வந்தவரை திருப்பி அனுப்பிவிட்டார்.

### நன்மையே நோக்கு – வேதாத்திரியம்

“எண்ணம் சொல்செயலால், எவருக்கும் எப்போதும்,
நன்மையே விளைவிக்க நாட்ட மாயிரு.” (ஞாக.பா.1543)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

## 8.அங்கிருந்து நுழை

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு துறவி தானாகவே வலிய வந்து ஜென் ஆசிரியர் ஸுவான் ஷாவிடம் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார்.

பின்பு ஜென் ஆசிரியரிடம், “நான் இப்பொழுதுதான் மடத்திற்கு வந்துள்ளேன்.. எனக்கு மார்க்கத்தினை அடைவதற்கான வழியைக் காண்பியுங்கள்” என்று கேட்டார்.

“பள்ளத்தாக்கில் இரைச்சலுடன் ஓடும் ஓடையாற்றின் சத்தத்தினை உங்களால் கேட்க முடிகிறதா?” என்றார் ஸுவான்- ஷா.

“ஆமாம்” என்றார் துறவி.

அங்கிருந்து நுழை”

“மன ஒருமைப் பேற்றால் மயக்கமறும், உண்மை ஒளி
தனது நிலையை விளக்கும். சமுதாயம் அற நெறியால்
புனித மடையும். உலகும் போர் ஒழிந்து அமைதி பெறும்.
உனது அறிவை, உயிரை, உண்மையினை உணர்ந்தமைவாய்.”
(மாக்கோலம் பக்.137)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 9.ஜென்னும் தேநீரும்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

தேநீர் தயாரிப்பாளர் தெரியாமல் ஒரு சாமுராய் வீரனை அவமதித்து விட்டார்.

கோபம் கொண்ட அந்த வீரன், தேநீர் தயாரிப்பாளரை வாள் சண்டைக்கு அழைத்தான்.

இதனால் பயந்து போன தேநீர் தயாரிப்பாளன் சாமுராயிடம் மன்னிப்பு கேட்டான்.

இருந்தாலும் சாமுராய் விடுவதாயில்லை.

உடனே ஜென் குருவின் உதவியை நாடினார் தேநீர் தயாரிப்பாளர்.

அதற்கு அந்த ஜென் குரு, தேநீர் தயாரிக்கும் போது எவ்வளவு கவனமாய் இருப்பீர்களோ அதே கவனத்தோடு எதிர் கொள்ளுங்கள் என்று கூறினார்.

சண்டைக்கான நாளும் வந்தது. தேநீர் தயாரிப்பாளர் அமைதியாகவும், கவனமுடனும் இருந்தார். அவரை எப்போது? எப்படித் தாக்குவது என்று தெரியாமல் தடுமாறிப் போனார் சாமுராய்.

உடனே வாளைத் தாழ்த்தி தேநீர் கடைக்காரரிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு விடை பெற்றான் சாமுராய்.

(சாங் வம்சத்தின் குரு யுவான்வு கெகின் தனது ஜப்பானிய சீடருக்கு எழுதும்போது, ஜென்னும் தேநீர் தயாரிப்பதும் ஒன்றுக்கொன்று இணையானவைதான் என்று கூறியுள்ளார்.)

## எண்ணத்தின் வலிமை – வேதாத்திரியம்.

"எண்ணியவெல்லாம் எண்ணியபடியே யாகும்.
எண்ணத்தில் உறுதியும் ஒழுங்கும் அமைந்திடில்." (ஞாக.பா.1367)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 10. மனோதிடம் வேண்டும்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

"ஜென் துறவி பென்கேயிடம் படித்த சீடன் ஒருவன் தற்காப்புக் கலையில் மிகவும் ஆர்வம் உள்ளவன்.

இளைஞான சீடன் தன்னுடைய ஆசிரியருடைய மனோதிடத்தை சோதித்து பாாத்து விடுவது என முடிவெடுத்தான்.

ஒரு நாள் புத்த பிட்சுகள் வைத்து இருக்கும் ருத்திராச்சை போன்ற மணிமாலையை உருட்டிக் கொண்டே தியானத்தில் அமா்ந்து இருந்த ஆசிரியரைப் பாா்த்தான். ஈட்டியை எடுத்து வேகமாக ஆசிரியரை நோக்கி எறிந்தான்.

ஜென் ஆசிரியா் ஈட்டியின் குறியிலிருந்த இலாவகமாக விலகி தன் கையிலிருந்த மணி மாலையால் தட்டி விட்டாா்.

அதன் பிறகு, சீடனைப் பாா்த்து புன்னகையுடன் "உனது ஈட்டி வீச்சு இன்னும் முதிா்ச்சி பெறவில்லை. ஈட்டி நகா்வதற்கு முன்பே உன்னுடைய மனம் நகா்ந்து விட்டது" என்றாா்.

## மனோதிடம் – வேதாத்திரியம்

- "ஒன்றையே நினைந்து நினைந்து அதில் தானே தன்னை நிலை நிறுத்திக் கொண்டு பழகக்கூடிய உளப்பயிற்சியே மனோதிடத்தை (வில்பவா்) உண்டாக்கும்." (வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள்)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 11. இறைவனுக்கு பலி கொடுக்கலாமா?

(ஜென்னும் வேதாத்திரியமும்)

"பண்டிகை வரப்போகிறது. அதற்கு பலி கொடுப்பதற்கு தான் இந்த ஆட்டை கூட்டிச் செல்கிறேன்" என்று ஒரு குயவன் ஜென் குருவிடம் சொன்னான்.

“பலியா?” குரு வியப்புடன் கேட்டார்.

“ஆமாம் சாமி. தெய்வத்துக்கு திருவிழா அன்றைக்குப் பலி கொடுத்தால் விசேஷம். தெய்வம் மகிழ்ந்து வரம் கொடுக்கும். எல்லாம் சுபீட்சமாகயிருக்கும்”

இதைக்கேட்ட குரு எழுந்தார். அந்த குயவனின் மண் பானையை எடுத்து ஓங்கித் தரையில் அடித்தார். பானை துண்டு துண்டாகச் சிதறியது.

குயவன் கோபத்துடன் துறவியைப் பார்த்தான்.

துறவி நிதானமாகக் கீழே குனிந்தார். சிதறிய ஓட்டாஞ் சில்லுகளை ஒன்றுவிடாமல் அடுக்கினார். குயவனிடம் நீட்டினார்.

“என்ன இது?” என்றான் குயவன் கோபமாக.

“உனக்குப் பிடிக்குமே, அப்பா?” என்றார் குரு.

“என்ன உளறுகிறீர்கள். நான் கஷ்டப்பட்டு செய்த பானையை உடைத்து விட்டு அது எனக்கு பிடிக்கும் என்று என்னிடமே நீட்டுகிறீர்கள். கேலியா? கிண்டலா? உங்களுக்கு பித்தா?” என்று ஆத்திரப்பட்டான் குயவன்.

“அப்படியெல்லாம் எதுவும் இல்லையப்பா. உண்மையான அன்புடன் தான் செய்தேன்.” என்று குரு சிறிதும் பதட்டப்படாமல் சொன்னார்.

“நான் செய்த அந்தப் பானையில் என் உழைப்பு முழுவதும் அடங்கியிருக்கிறதே! அதை உடைக்க நான் எப்படிச் சம்மதிப்பேன்? இது எனக்குப் பிடிக்கும் என்று யார் உமக்குச் சொன்னது?”

- “நல்லது. ஆண்டவன் படைத்த ஓர் உயிரை கதறக் கதற வெட்டிக் கொன்று பலியிடலாம் என்று உனக்கு யார் சொன்னது?

- இதை இறைவன் மகிழ்ந்து ஏற்றுக்கொண்டு வரம் தருவான் என்று நீ எப்படி நம்புகிறாய்?
- எந்தத் தாய் தன் குழந்தை கதறுவதைக் கேட்டு சகிப்பாள்?
- எந்தத் தகப்பன் தன் குழந்தை கொல்லப்படுவதை விரும்புவான்?"

என்று குருவிடமிருந்து அடுக்கடுக்காகக் கேள்விகள் பிறந்தன.

குயவன் நிதானமாக ஆட்டின் கழுத்திலிருந்த கயிற்றை அவிழ்க்கத் தொடங்கினான்.

## உயிர்கட்கு இழைக்கும் தீங்கு – வேதாத்திரியம்

"உயிர்கட்கு வாழ்வதற்கு ஒத்த பல பொருள் வசதி
உயிர் பிறந்த போதியற்கை ஒழுங்கமைப்பால் உள்ளனவே,
உயிர் இயற்கை மதிப்புகளை உணராத மக்கள் பிற
உயிர்கட்கு இழைக்கும் தீங்கே உலகத் துன்பமெலாம்" (ஞாக.பா.299)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 12.அகங்காரம் போனால், மகிழ்ச்சி கிடைக்கும்!

### (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு நாட்டின் அரசன் "நான் தான் பெரியவன்" என்ற அகங்காரத்தோடு இருப்பவன். ஒரு நாள் அந்த அரசன் வேட்டைக்கு காட்டுக்குச் சென்றான்.

அப்போது அவன் தியானம் செய்து கொண்டிருந்த ஒரு துறவியைப் பார்த்தான்.

துறவி கண்ணை மூடி தியானம் செய்யும் போது அவரிடம் சென்று "நான் பல நாடுகளை வென்று என் நாட்டோடு இணைத்திருக்கிறேன். நான் வென்று வந்த செல்வத்தால் என் கஜானா நிரம்பி வழிகிறது. மேலும் அந்தபுரம் முழுவதும் நான் கவர்ந்து வந்த அழகிகள் இருக்கின்றனர். இருப்பினும் நான் சந்தோஷமாக இல்லை. எனக்கு எப்போது சந்தோஷம் கிடைக்கும்?" என்று கேட்டான்.

தியானம் செய்து கொண்டிருந்த துறவி, தியானம் கலைந்ததால் சற்று கோபமாக "நான் செத்தால் உனக்கு சந்தோஷம் கிடைக்கும்" என்று சொல்லிவிட்டு, மறுபடியும் தியானத்தில் ஆழ்ந்தார்.

அதைக் கேட்ட அரசன் "நான் எவ்வளவு பெரிய அரசன். என்னையே அவமானப்படுத்துகிறாயா?" என்று சொல்லி, துறவியை கொல்ல, தன் இடுப்பில் இருந்த கத்தியை உருவினான்.

அப்போது அந்த துறவி "அட மூடனே, நான் என்றால் என்னை சொல்லவில்லை, "நான்" என்ற அகங்காரம் செத்தால் தான் உனக்கு சந்தோஷம் கிடைக்கும்" என்று சொல்லி விளக்கினார்.

தன்முனைப்பு எனும்செருக்கு, மனித ஆற்றலதனைத்
   தரம்குறைத்து அழுக்காறு பேராசை மேலும்,
தன்முனைப்பு பிறருடைய பொருள் நலம் பறிக்கும்.
   தவறான பழிச்செயல்கள் ஐந்தையும் பெருக்கும்.
தன்முனைப்பு சிந்தனையை உயரவிடா. வாழ்வில்
   தனக்குரிய உறவினர்கள் நண்பர்கள் வருந்த.
தன்முனைப்பே துணிந்து செயல் புரியவைக்கும் மயக்கம்.
   தற்சோதனை தவமும் அறமும் குறைநீக்கும்."   (ஞாக.பா.1573)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 13. பூட்டாத பூட்டு

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு அரசர் தன் நாட்டுக்கு ஒரு முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்க நினைத்தார்.

அதற்கு அவர் தன் அமைச்சரவையில் சம தகுதி பெற்ற நால்வரில் ஒருவரை முதலமைச்சராக தேர்ந்தெடுக்க ஒரு பரீட்சை வைத்தார்.

அதற்காக அரசர் ஒரு நாள் அந்த நால்வரையும் அழைத்தார்.

"என்னிடம் ஒரு பூட்டு இருக்கிறது. அது கணித முறைப்படி வடிவமைக்கப்பட்டது. அதனை திறக்க நால்வருக்கும் ஒரு வாய்ப்பு தான் வழங்கப்படும். அதனை யார் விரைவில் திறக்கின்றனரோ அவரே நாட்டின் முதலமைச்சர்" என்று கூறினார்.

முதலமைச்சராக வேண்டும் என்ற ஆசையில், டென்சனோடு கணித முறைப்படி வடிவமைக்கப்பட்ட அந்த பூட்டை திறக்க அன்று இரவு முழுவதும் பல ஓலைச்சுவடிகளை புரட்டிப் பார்த்தனர். ஆனால் எதுவுமே கிடைக்கவில்லை.

ஆனால் அவர்களுள் ஒருவர் மட்டும், எந்த டென்சனும் இல்லாமல், ஒருசில ஓலைகளை மட்டும் புரட்டி பார்த்துவிட்டு தூங்கப் போய்விட்டார்.

மறுநாள் அரசவையில், கணித முறைப்படி வடிவமைக்கப்பட்ட அந்த பூட்டை சேவகர்கள் தூக்கி வந்து, அரசரின் முன்னிலையில் வைத்தனர். அதனை பார்த்த அனைவருக்கும் ஒரே படப்படப்பாக இருந்தது.

அரசவைக்கு வரும் போது கொண்டு வந்திருந்த ஓலைச்சுவடிகளை அவர்கள் முன்னும் பின்னும் புரட்டிப் பார்த்தனர்.

ஆனால் அவர்களுக்கு அதற்கான வழி மட்டும் புலப்படவில்லை. ஆகவே அவர்கள் தங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டனர்.

ஆனால் அவர்களுள் ஒருவர் மட்டும் அந்த பூட்டின் பக்கம் வந்து பார்த்தார். என்ன அபூர்வம்! பூட்டு பூட்டப்படவில்லை.

அதனால் அவர் அதனை எளிதாக திறந்தார். அரசரும் அவரை முதலமைச்சராக தேர்ந்தெடுத்தார்.

### அறிவின் அனுபவம் – வேதாத்திரியம்

"என்றென்றும் மாறாத, அளப்பரிய,
உவமையிலா, இயற்கை வேகம்,
அன்றன்றும் வாழ்க்கையிலே நினைந்து நினைந்து,
அனுபவிப்பான் அறிவறிந்தோன்!" (ஞாக.பா.1210)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 14. அனுபவமே குரு
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு நாள் ஜென் குரு ஒருவர் ஆற்றுப் பாலத்தின் மீது நின்று கொண்டு, ஆற்று நீரைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது அந்த வழியாக மூன்று பிக்குகள் வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் ஆற்றுப் பாலத்தின் மீது நின்று கொண்டிருந்த ஜென் குருவைப் பார்த்து வந்து கொண்டிருந்தனர்.

அவர்கள் ஜென் வழியைப் பின்பற்றாதவர்கள் தான். எனினும் அவரை ஜென் குரு என்று அடையாளம் கண்டு, அவர் அருகில் வந்து நின்றார்கள்.

அவர்களில் ஒருவர் ஜென் குருவைப் பார்த்து,''ஆறு எவ்வளவு ஆழம்?'' என்று கேலியாகக் கேட்டார்.

அப்போது குரு சிறிதும் யோசிக்காமல், கண் இமைக்கும் நேரத்திற்குள் கேள்வி கேட்டவரைத் தூக்கி ஆற்றில் போட்டுவிட்டு ''நீயே அதை அளந்துபார்'' என்று சொன்னார்.

## அனுபவம் – வேதாத்திரியம்

"தேவையுணர்வாய் எழுந்த உடல் இயக்கச்
சிறப்பேதான் உயிரறிவாம். புலன்கட் கேற்பத்
தேவைகளை முடிக்கச் சூழ்நிலைகள் தமைத்
தெரிந்து, உடல் கருவிகளின் அமைப்புக் கேற்பத்
தேவைகளை முடிக்கின்ற செயல்கள் ஆகும்.
திரும்பத் திரும்பச் செய்ய அனுபவம் ஆம்.
தேவையே அறிவியக்க முதல் கட்டம் ஆகும்.
தன்மூல நிலையுணர்தல் முடிவுக் கட்டம்." (ஞாக.பா.1513)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 15. கற்றதும் பெற்றதும்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு கிராமத்தில் ஞானி ஒருவர் இளைஞர்களுக்கு கல்வி போதித்து வந்தார்.

அவர் இலக்கு மதிப்பெண்களோ தர நிர்ணயமோ அல்ல. முழுமையான கற்றல் மட்டுமே...

எனவே நிதானமாகவும் அதே சமயம் சீடர்கள் மனதில் நன்கு பதியுமாறும், அவர் சொல்லிக் கொடுத்தார்.

ஆனால் குருவின் இந்த ‘வேகம்' மாணவர்களில் ஒருவனுக்குப் பிடிக்கவில்லை.

ஒரே சமயத்தில் எல்லாவற்றையும் சொல்லிக் கொடுப்பதை விட்டு விட்டு மெதுவாக நாள் கடத்திக் கொண்டே இருக்கிறாரே' என்று குற்றம் சாட்டினான்.

விஷயத்தைக் கேள்விப்பட்ட ஞானி அந்த மாணவனை அழைத்தார். பக்கத்திலிருந்த ஒரு பெரிய விறகுக் கட்டைக் காண்பித்து ‘அதைத் தூக்கி வெளியே கொண்டு போய் வை' என்றார்.

விறகுக் கட்டைத் தூக்க முயன்ற மாணவன், அதன் கனம் தாங்காமல் தடுமாறி விழுந்தான். எழுந்து கையைத் தட்டிக் கொண்டு, ‘தூக்க முடியவில்லை குருவே... மிகவும் கனமாக உள்ளது' என்று தன் தோல்வியை ஒப்புக் கொண்டான்.

‘சரி... அந்தக் கட்டைப் பிரித்து விறகுகளைக் கொஞ்சம் கொஞ்சமாய் கொண்டு போய் வை' என்றார் ஞானி.

அட... நான்கைந்து முறை எடுத்து வைத்ததில், விறகுகள் விரைவில் இடம் பெயர்ந்தன!

‘கண்ணா... உனக்குக் கற்பிப்பதும் இப்படித்தான். ஒரேடியாக உன் மூளைக்குள் திணித்தால் நீ திணறி விழுந்துவிடுவாய்.

கொஞ்சம் கொஞ்சமாக அதே சமயம் முழுமையாகக் கற்றுக் கொண்டாயானால் அது நிரந்தரமாக உன் மனதில் தங்கிவிடும்..

நீ கற்ற கல்வி தரமாகவும் இருக்கும்' என்று விளக்கினார் ஞானி. மாணவனுக்கு மிக நல்ல பாடமாக அது அமைந்தது!

## கற்றதும் பெற்றதும் – ஆசிரியர்

“கற்றது உண்மையில் கருத்து விரிவு.

பெற்றது நிறைவும் பேரா னந்தமும்.
அற்றது பழிச்செயல் அழுத்தப் பதிவுகள்.
உற்றது பிறவிப் பயன்மெய் யறிவு” (ஞாக.பா.442)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 16. யார் சிறந்தவர்?

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஜென் குருவிடம் மூன்று சீடர்கள் இருந்தனர். குருகுல வாசம் முடிந்து மூவரும் குருவிடம் சொல்லிக் கொண்டு தத்தமது வழியில் பிரிந்து சென்றனர்.

என்ன வேலை செய்வது என்று முதலாவது சீடன் யோசித்தான்.

இந்த நாட்டின் அரசன் கற்றறிந்த அறிஞர்களை மதிப்பவன் என்பதால் அரசவை சென்று மன்னனை போற்றிப் பாடி நின்றான்.

அந்தத் துதிப் பாடல் கேட்டு பெருமகிழ்ச்சி கொண்ட அரசன் சீடனுக்கு வெகுமதி அளித்ததோடு, அரசவையிலேயே வைத்துக் கொண்டான்.

இரண்டாவது சீடனிடம் நிறைய யோசனைகள் இருந்தன. ஆனால் எதைச் செய்வது, எப்படிச் செய்வது என்பதில் குழப்பம் இருந்தது. அவன் தன் மனம் போன போக்கில் எங்கெங்கோ சுற்றித் திரிந்தான்.

ஒருநாள் சத்திரம் ஒன்றில் இளைப்பாறினான். அந்தச் சத்திரத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது. அவன் அதை வாங்கி உண்டபோது, அதுவரை கண்டறியாத ருசியை உணர்ந்தான்.

அந்த அறுசுவை உணவைத் தயாரித்து அளித்த சமையல்காரரைச் சந்தித்துப் பேசினான்.

தனக்குப் பின்னால் அந்தக் கலையை, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லத் தகுந்த வாரிசு இல்லாமல் அவர் வாடுவது புரிந்தது. சற்றும் தயங்காமல், அந்தப் பெரியவரிடம் உதவியாளராகச் சேர்ந்து கொண்டான்.

அவனைப் பிடித்துப் போனதால் சமையல் கலையின் நுணுக்கங்கள் எல்லாவற்றையும் அவனுக்குக் கற்றுக் கொடுத்தார். அவனும் வெகு விரைவிலேயே சிறந்த நளபாகச் சக்கரவர்த்தியாக உருவெடுத்தான்.

மூன்றாவது சீடனோ முதலில் தனது சொந்த ஊருக்குச் சென்றான்.

அப்போதுதான் அந்தக் கிராமத்தில் நிறையச் சிறுவர்கள் காடுகளிலும் வரப்புகளிலும் கிடைத்த வேலைகளைச் செய்து பொழுதைக் கழிப்பதைக் கண்டான்.

தனக்கு அமைந்தது போல ஒரு குருவின் வழிகாட்டல் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டான்.

ஏன் அந்தச் சிறுவர்களுக்குத் தான் கற்ற கல்வியை அளிக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் செயலில் இறங்கினான்.

ஆனால் தன்னுடைய வாழ்க்கைக்கே வழி தேட வேண்டிய நிலையில் தன்னால் எப்படி மற்றவர்களுக்கு உதவ முடியும் என்ற சந்தேகம் அவனுக்கு.

குரு அடிக்கடி சொல்லும் உபதேசம் ஒன்று நினைவுக்கு வந்தது. எந்த ஒரு நல்ல காரியத்தையும் சிந்தித்தவுடன் செயல்படுத்தத் துவங்கிவிட வேண்டும்;

அவ்வாறு துவங்கிவிட்டால் அதை வெற்றிகரமாக முடிப்பதற்குத் தேவையான அனைத்து உதவிகளும் தானே தேடி வரும் என்பதுதான் அந்த உபதேசம்.

உடனடியாக, அந்தச் சீடன், அச் சிறுவர்களின் பெற்றோர்களைச் சந்தித்துப் பேசினான்.

சில சிறுவர்களைச் சேர்த்துக் கொண்டு, ஒரு மரத்தடியில் அவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க ஆரம்பித்தான்.

அவனுடைய அர்ப்பணிப்பு உணர்வைக் கண்ட அந்த மக்கள் அவன் எதிர்பார்த்ததற்கும் மேலாகவே, தாமாக முன்வந்து உதவிகளைச் செய்தனர்.

அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்தி, படிப்படியாக வளர்ந்தான். சீக்கிரத்திலேயே, பெரியதொரு கல்விச் சாலையை நிறுவி, சிறந்த கல்வியாளனாகத் திகழ்ந்தான்.

பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாள் தன் சீடர்களைக் காண விரும்பினார் குரு.

மூவரும் குருவைக் காண ஒருசேரக் கிளம்பிப் போனார்கள். தனது சீடர்களைக் கண்டதும், அவர் பெரிதும் மகிழ்ந்தார்.

தங்களுக்கு ஞானம் அளித்த குருவுக்கு, சிலநாட்கள் பணிவிடை செய்வது என்று மூவரும் தீர்மானித்தனர்.

ஆசிரமத்தில் தங்கி, குருவுக்குப் பணிவிடைகள் செய்தனர். அப்போது மற்ற இரண்டு சீடர்களைக் காட்டிலும் மூன்றாவது சீடனுக்குக் கூடுதல் முக்கியத்துவம் தந்தார் குரு. இது மற்ற சீடர்கள் இருவரையும் மனம் நோகச் செய்தது.

ஒருநாள், மூன்றாவது சீடன் இல்லாத சமயம் பார்த்து, இருவரும் தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

குரு புன்னகைத்தார்.

பின்னர் முதலாமவனைப் பார்த்துச் சொன்னார். “நீ அரசவைப் புலவன்! சிறந்த இலக்கியங்களைப் படைக்கின்றாய். உனது படைப்பு,

படிப்பவர்களுக்கு மகிழ்ச்சி தருகிறது. மன எழுச்சியையும் தருகிறது. அதனால் நீ உயர்ந்தவன்தான்! நான் மறுக்கவில்லை!'என்றார்.

பின்னர், இரண்டாமவனைப் பார்த்து, "நீ சிறந்த நளபாகனாக இருக்கின்றாய். வயிற்றுக்கு உணவளித்தவன் தாய்க்கு ஒப்பானவன்! அதனால் நீயும் உயர்ந்தவன்தான்! நான் ஏற்றுக் கொள்கிறேன்," என்ற

குரு மேலும் தொடர்ந்தார்.

"ஆனால், அறியாமையில் இருக்கும் ஒருவனுக்குக் கல்வி அளிப்பது என்பது, பார்வையில்லாதவனுக்கு பார்வை அளிப்பது போல! கல்விக்கண் திறக்கப்பட்டவனுக்குத்தான் உலகின் மற்ற வளங்கள் அனைத்தும் கிடைக்கும்! அதனால் எழுத்தறிவித்தவன் இறைவனாகிறான்! அதனால்தான் உங்கள் இருவரையும்விட மூன்றாமவனுக்குச் சற்றுக் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்துவிட்டேன்.

ஒரு குருவாக நான் இதைச் செய்திருக்கக் கூடாதுதான்! உங்கள் மூவரையும் சமமாகப் பாவித்திருக்க வேண்டும்... என்னை மன்னித்துவிடுங்கள்...' என்றார் குரு.

"அகங்காரம் எங்கள் கண்களை மறைத்துவிட்டது. எங்கள் இருவரைக் காட்டிலும் அவனுடைய சேவை உயர்வானது என்பதை நாங்கள் இப்போது தெளிவாக உணர்ந்து கொண்டோம். தாங்கள்தான் எங்களை மன்னிக்க வேண்டும்' என்றனர் சீடர்கள் இருவரும்

## ஆசிரியர் – வேதாத்திரியம்

"வாழ வழிகாட்டிப் பயிற்சியூட்டி
வாழவைக்கும் சிறந்தசெயல் கல்வியாகும்.
வாழ்வினையே கல்வி போதனைக்கே நல்கி,
வாழும்உயர் நிலைபெற்றோர் ஆசான் ஆவார்." (ஞாக.பா.476)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 17. மழையாக பொழிந்த மலர்கள்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

புத்தரின் சீடரான சுபுதிக்கு, வெறுமையின் உண்மையான அர்த்தம் தெரிந்திருந்தது.

ஒரு நாள் மனம் முழுக்க வெறுமை புடை சூழ ஒரு மரத்தின் அடியில் அமர்ந்திருந்தார்.

அப்போது திடீரென அந்த மரத்தின் மலர்கள் மழை போல அவர் மீது விழுந்தன.

அப்போது, மேலிருந்து கடவுள்கள், உனது வெறுமையின் பேச்சைக் கேட்டு நாங்கள் உன்னைப் பாராட்டுகிறோம் என்றனர். அதற்கு சுபுதி, நான் வெறுமை குறித்துப் பேசவில்லையே என்றார்.

நீயும் பேசவில்லை, நாங்களும் கேட்கவில்லை என்று கடவுள்கள் பதிலளித்தனர். தொடர்ந்து மலர்கள் சுபுதியைச் சூழ்ந்து வீழ்ந்த வண்ணம் இருந்தன.

### மோனத்தின் பெருமை - வேதாத்திரியம்

"மோனநிலையின் பெருமை யார் எவர்க்கு
 முன்படர்ந்து வாயாலே சொல்லக்கூடும்?
மோனமே அறிவினது அடித்தளம் ஆம்.
 மிகவிரிவு! எல்லையில்லை! காலம் இல்லை!
மோனத்தில் அறிவு தோய்ந்து பிறந்தால்,

முன்வினையும் பின்விளைவும் நீக்கக் கற்கும்,
மோனநிலை மறவாது கடமை ஆற்ற,
மென்மை, இன்பம் ,நிறைவு, வெற்றி அமைதியுண்டாம்."
(ஞாக.பா.1640)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 18. ஞானோதயத்தின் கதை

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

இளம் துறவியான சியூனோ நீண்ட காலமாக எங்காகுவைச் சேர்ந்த புக்கோ என்ற ஜென் குருவிடம் ஜென் போதனைகளைக் கற்றுக் கொண்டிருந்தார்.

ஆனால் அவருக்கு தியானத்தின் பலன் மட்டும் கை கூடாமலேயே இருந்து வந்தது. இந்த நிலையில் ஒரு இரவில் அவருக்கு ஞானோதயம் ஏற்பட்டது.

ஒரு மூங்கிலால் இணைக்கப்பட்டிருந்த பழைய வாளி ஒன்றை அவர் தூக்கிக் கொண்டு சென்றார்.

அப்போது திடீரென மூங்கில் உடைந்து வாளியின் கீழ்ப்புறம் அறுந்து விழுந்தது. அப்போதுதான் சியூனோவுக்கு ஞானோதயம் பிறந்தது.

அதை ஒரு கவிதையில் அவர் வடித்துக் கூறினார்.

நான் அந்த பழைய வாளியை காக்க முயற்சித்தேன்

ஆனால் மூங்கில் பலவீனமாக இருந்ததால் அது உடைந்தது.
அதனால் வாளியின் கீழ்ப் பகுதியும் உடைந்து போனது.
வாளியில் தண்ணீர் இல்லை

தண்ணீரில் தெரிந்த நிலவையும் காணவில்லை.

## ஞான நிலைகள் – வேதாத்திரியம்

"அஞ்ஞானம் அறிவினது ஆரம்ப நிலையாகும்.
விஞ்ஞானமோ அறிவின் வேகநிலை
மெய்ஞ்ஞானம் அறிவதனின் பூரணமாம்.
இஞ்ஞானம் மூன்றும் இயற்கையின் எண்ணநிலை." (ஞாக.பா.1043)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 19. குரு பதவி

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு பாலைவனத்தில் இரண்டு பேர் வந்த வழியை மறந்து போய் மாட்டிக் கொண்டு தவித்தனர்.

பசியிலும், தாகத்திலும் அவர்கள் வாடினர். அங்குமிங்குமாக அலைந்த அவர்களுக்கு ஒரு பெரிய சுவர் ஒன்று தென்பட்டது.

உடனே அங்கு போனார்கள். சுவரின் மறுபக்கத்தில் ஒரு நீர் வீழ்ச்சி இருப்பதையும், அங்கு பறவைகளின் சப்தம் கேட்பதையும் அவர்கள் உணர்ந்தனர்.

மேலும் மறுபக்கத்தில் இருந்த ஒரு பெரிய மரத்தின் கிளைகள் இவர்கள் இருந்த பக்கமாக, சுவருக்கு மேல் நீட்டிக் கொண்டிருந்ததையும், அதில், சுவையான பழங்கள் இருப்பதையும் கண்டனர்.

இதையடுத்து அவர்களில் ஒருவர் கஷ்டப்பட்டு அந்த சுவரின் மீது ஏறி மறுபக்கம் சென்றார். போனவர் அப்படியே போய் விட்டார்.

இன்னொருவரோ அப்படிப் போகவில்லை. மாறாக பாலைவனத்தில் தன்னைப் போல வழியை மறந்து தவிப்பவர்களுக்கு, இந்த பாலைவனச் சோலை இருப்பதைக் காட்டி அவர்கள் மீண்டு செல்ல உதவியாக அங்கேயே தங்கி விட்டார்.

### பூஜ்யர் – வேதாத்திரியம்

"பூஜ்ஜியத்தைப் போல் நிறைவாய்ப்
பொருத்த முள சிறப்புடையோர்
பூஜ்ஜியர் எனப் படுவர்
புனித நிலை குருநாதர்." (ஞாக.பா.14)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 20. கை உணர்த்திய கதை

(ஜென்னும் வேதாத்திரியமும்)

தம்பா மாகாணத்தில் மொகுசென் என்ற ஜென் குரு, ஒரு கோவிலில் வாழ்ந்து வந்தார்.

அவரை பின்பற்றும் பக்தர்களுள் ஒருவன் குருவை பார்க்கச் சென்றான்.

அப்போது குருவிடம் அவன் தன் மனைவியின் கஞ்சத்தனத்தை பற்றி புகார் கூறினான்.

குரு அவனை அழைத்து "உன் மனைவியை இங்கு அழைத்து வா" என்று கூறினார்.

குரு அவன் மனைவியிடம் ஒரு சிறிய சோதனை செய்தார்.

அவன் மனைவியிடம் தனது தன் விரல்கள் அனைத்தையும் உள்ளடக்கி கைகளை நீட்டி காண்பித்து இது என்ன என்று கேட்டார். அதற்கு அவள் "இது ஒரு குறைபாடு" என்று கூறினாள்.

பின்பு அவர் விரல்களை விரித்து கைகளை சதுரமாக செய்து "இது போல் இருந்தால் என்ன?" என்று மீண்டும் கேட்டார்.

அவள் "இது வேறு வகையான குறைபாடு" என்று சொன்னாள்.

பிறகு அந்த குரு அவளிடம் "நீங்கள் இந்த அளவிற்கு புரிந்து கொண்டிருப்பதை கண்டு மகிழ்கிறேன், நீங்கள் ஒரு நல்ல மனைவி" என்று அவளை ஊக்குவித்து கூறினார்.

மேலும் அவர் அவளிடம் "நம்மிடம் எவ்வளவு இருக்கிறது என்பது முக்கியமல்ல. நம்மிடம் இருப்பதை கொண்டு நாம் என்ன செய்கிறோம் என்பது தான் முக்கியம்" என்றும் சொல்லி, நான் கேட்ட அனைத்திற்கும் சரியாக புரிந்து கொண்டு பதிலளித்த நீங்கள், ஏன் வாழ்க்கையில் செலவழிப்பதை பெரிய விஷயமாக நினைக்கிறீர்" என்று கூறி சென்றுவிட்டார்.

அதன் பின்பு கணவன் மனைவி இருவரும் சேமிப்பையும், செலவு செய்வதையும் புரிந்துகொண்டு ஆனந்தமாக வாழ்ந்து வந்தனர்.

செல்வம் மிகுந்தால் ஈகை மலரும் – வேதாத்திரியம்

"பொருட்கள் தன்தேவைக்கு மேல் இருந்தால்,
பொறுப்புடனே பிறர்க்குதவும் நற்குணம் ஆம்.
பொருட்கள் தன்தேவைக்கே சரியாய்ப் போனால்
பொறுப்புணர்ச்சி கட்டுண்டு கடும்பற்றாகும்." (ஞாக.பா.17)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 21. இந்த நாள் மீண்டும் வராது
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவியான டாகென்-னிடம் ஒரு முறை நிலக்கிழார் ஒருவர் வந்தார்.

எனக்கு பொழுதே போகவில்லை, ரொம்ப போர் அடிக்கிறது. எப்படி பொழுதைப் போக்குவது என்று சொல்லுங்களேன் என்றார்.

அதற்கு,

இந்த நாள் மீண்டும் வராது. ஒவ்வொரு நிமிடமும் விலை மதிப்பில்லாத ரத்தினத்திற்குச் சமமானது என்பது உள்ளிட்ட நான்கு தத்துவங்களை அவருக்குச் சொல்லி அனுப்பி வைத்தார் டாகென்.

### காலம் – வேதாத்திரியம்

"காலத்தின் நுண்ணலகு கண் சிமிட்டும் நேரம்,
கணக்கில்லை இரண்டதிர்வுக்கிடை அமையும் நீளம்.
காலம் என்ற இறையாற்றல் அதிர்வலையாய், உயிர்கள்
கருத்தரித்தல் முதல் இறத்தல்வரை அனைத்தாம். அதனால்,
காலத்தைக் காலன், காளி, இயமன் என்றுமொழிந் திடுவோம்.
கருத்துயர்த்தி சிந்தித்துத் தெளிவடைந்து கொண்டால்,
காலம்தான் அனைத்தையுமே மாற்றிக் கொண்டிருக்கும்
கணக்கறிவோம். பயன்படுத்தி ஆக்கவழி வாழ்வோம்."
(ஞாக.பா.1789)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 22. வாழ்க்கை வாழ்வது எப்படி?
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

இளைஞன் ஒருவன் “ வாழ்க்கை வாழ்வது எப்படி” என்ற கேள்விக்கு விடையை அறிந்து கொள்ள ஜென் குருவை தேடி மலையேறி மூச்சிரைக்க நடந்து வந்தான்.

ஜென்குருவை சந்திக்கும் ஆர்வத்தில் ஒருவழியாக மலையேறி வந்து விட்டான்.

ஆஸ்ரமத்துக்கு வந்ததும் அங்கு ஒரு இளம் துறவி இருந்தார். அவரிடம் “ வணக்கம் ஐயா வாழ்க்கையை வாழ்வது எப்படி என்ற கேள்விக்கு விடை தெரிந்து கொள்வதற்காக குருவைப் பார்க்க வந்திருக்கிறேன் “ என்றான்.

“ஓ..... அப்படியா குரு தியானத்தில் இருக்கிறார். முன் அறையில் அமருங்கள் வருவார்.” என்றவர் .

ஒரு கோப்பை நிறைய சூடான தேனீரை ஊற்றிக் கொடுத்தார்.

இயற்கை எழில் கொஞ்சும் மலையையும் , குளிர்ந்த காற்றையும்- சில்வண்டுகளின் சத்தத்தில் குயிலோசையையும்- மடாலயத்தின் மௌனத்தையும்- ரசித்துக் கொண்டிருந்ததில் சூடான தேனீரை குடிக்க மறந்தே போய்விட்டான். தேனீர் ஆறிபோய் விட்டது.

சிறிது நேரத்தில் குரு அவனை நோக்கி வந்தார். அவன் எழுந்து வணங்கினான்.

குருவின் கண்களில் கனிவும் மென்மையும் தெரிந்தது.

“வாழ்க்கையை எப்படி வாழ்வது? என்ற கேள்விக்கு விடை கேட்டு வந்தேன்” என்றான் .

குரு லேசாக புன்னகை செய்தார் .பின்னர்” உன் கோப்பையில் உள்ள தேனீர் ஆறிப்போய் இருக்கிறதே!. அதை வெளியில் கொட்டிவிடு “ என்றார்

அவன் அப்படியே செய்தான்.

பின்னர் குரு அந்த கோப்பையில் சூடான தேனீரை ஊற்றி நிரப்பினார்.

அவன் அதை குடிக்க ஆரம்பிப்பதற்குள். குரு மீண்டும் தியானம் செய்ய சென்றுவிட்டார்.

அவன் மிகுந்த ஏமாற்றத்துடன் கீழிறங்கி வந்து கொண்டிருந்தான்

அப்போது மீண்டும் அந்த இளம் துறவியை பார்த்தான்.

“உங்கள் கேள்விக்கு பதில் கிடைத்ததா?” என்று கேட்ட துறவியிடம் நடந்ததை கூறினான்.

அதற்கு அந்த துறவி “குரு உங்கள் கேள்விக்கு சரியான பதிலை கூறிவிட்டாரே”!! என்றார்.

“ஜென் என்றால் அந்தந்த நொடியில் வாழ்வது என்று பொருள். மனம் என்னும் கோப்பையில் பழைய ஆறிப் போன எண்ணங்களை கொண்டு வாழாமல், இந்த அப்பொழுதில் சுடச்சுட வாழ்வதுதான் வாழ்க்கையை வாழும் முறை.

இதைத்தான் குரு உனக்கு செய்து காட்டி இருக்கிறார்.” வாழ்க்கையை எப்படி வாழ்வது என்னும் முறையை புரிந்து கொண்டான். அந்த நொடியில் வாழத் தொடங்கினான்.

## இன்பம் இன்பம் இன்பம் இன்பம் – வேதாத்திரியம்

“பிறவியின் நோக்கத்தை அறிந்தபோதும்
பின் அந்த எல்லையினை அடைவதற்கு
அறநெறி விழிப்போடு பொறுப்புணர்ந்து
ஆற்றி மனம், செயல், தூய்மை ஆனபோதும்
உறவுகளில் உண்மை நிலைஉணர்ந்து ஆற்றி

உயர்வான துறவுநிலை உணர்ந்தபோதும்
துறவுநிலை முடிவாக பெற்றபோதும்
துய்த்த பேரின்பம் எவ்வாறு உரைப்பேன்" (ஞாக.பா.1849)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 23.பேரலைகள்
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

"பேரலைகள்" என்று அழைக்கப்படும் ஒ-நாமி மெய்ஜி வருடத்தில் வாழ்ந்த மல்யுத்த வீரன்.

அவனுக்கு மல்யுத்தம் பற்றிய அனைத்து நுணுக்கங்களும் அத்துப்படி. நல்ல திடகாத்திரமான உடல்வாகு பெற்றவன்.

தான் பயின்ற மல்யுத்தக் கழகத்தில் நடக்கும் போட்டியில் தனது ஆசிரியரையும் வெல்லும் ஆற்றல் பெற்றவன்.

ஆனால், மக்களின் மத்தியில் நடைபெறும் உண்மையான போட்டியில் அவனுடன் படித்தவர்களும், அவன் சொல்லிக் கொடுத்த அடிப்பொடிகளும் கூட எளிதாக அவனைத் தூக்கிப் போட்டு பந்தாடினார்கள்.

ஹாகஜீ என்ற ஜென் ஆசரியர் ஓரிடத்தில் இல்லாமல் எல்லா இடங்களுக்கும் சென்று பிறருக்கு ஜென் பற்றிய கருத்துகளையும். தியானமும் சொல்லிக்கொடுப்பவர்.

ஒ-நாமி ஹாகுஜீவை சென்று சந்தித்து தனது பிரச்சனையைக் கூறினான்.

"பேரலைகள் என்பது உனது பெயர்" என்று கூறிய ஆசிரியர், ஒ-நாமியைப் பார்த்து

“இன்று இரவு முழுவதும் இந்த மடத்திலேயே தங்கி இரு. இனி நீ ஒரு பயந்த மல்யுத்த வீரன் அல்ல. உன்னையே நீ கற்பனை செய்து கொள்.

அந்த அதிவேகமாக கரையை முட்டும் அலைகளைப் போல, பேரலைகள் உருவாகி பெரும் சப்தத்துடன் அதி வேகமான வரும் போது. எதிரில் உள்ள அனைத்தையும் தவிடு பொடியாக்கும்.

அந்த பேரலைகளாக உன்னை மனதில் நினைத்து தியானம் செய்! நீ யாரும் வெல்ல முடியாத மல்யுத்த வீரனாக வருவாய்!” என்று அறிவுரை கூறிவிட்டு கிளம்பி விட்டார்.

ஒ-நாமி தரையில் அமர்ந்து தானே அந்த அலைகளாக எண்ணி தியானம் செய்ய ஆரம்பித்தான்.

முதலில் பல்வேறு எண்ணங்களும் வந்து முட்டி மோதி அவனை அலைக் கழித்தது.

பின்பு கொஞ்சம் கொஞ்சமாக தன்னை, தன் மன எண்ணங்களை ஒருமுகப் படுத்தி, அலைகளாக நினைக்கத் தொடங்கினான்.

சிறுசிறு அலைகளாக நினைக்கத் தொடங்கியவன், நேரம் ஆகஆக அலைகளின் வேகமும் உயரமும் பெரிதாகிக் கொண்டே வருவதை உணர்ந்தான்.

அந்த அலைகைள் மடத்தின் உள்ளே இருந்த பூந்தொட்டிகளை வேகமாக தள்ளி கீழே விழ வைத்தன.

கொஞ்ச நேரத்தில் புத்த விக்ரகத்தையும் அந்த அலைகள் விட்டு வைக்கவில்லை.

காலை ஆவதற்குள் அந்த மடம் அலைகளின் நுரைகளும் சப்தமும் கொண்டு முழுவதுமாக பேரலைகளில் சிக்கி மூழ்கியது.

காலையில் வந்த ஜென் ஆசிரியர். ஒ-நாமி தியானம் செய்து கொண்டு இருப்பதைப் பார்த்தார்.

புன்னகையோடு மல்யுத்த வீரனின் தோலில் தட்டி "இனி எதுவும் உன்னை தடை செய்ய முடியாது. நீ அந்த அலையாகி விட்டாய். எதிரில் வரும் எதையும் யாரையும் எளிதில் அடித்து துவம்சம் செய்து விடுவாய்" என்றார்.

அன்றே ஒரு மல்யுத்த போட்டியில் கலந்து கொண்டு வென்றான். அதன் பிறகு ஜப்பானில் யாராலும் அவனை வெல்ல முடியவில்லை.

## அகத்தவப் பயன்கள் -வேதாத்திரியம்

"அறிவு உயிரை நோக்கும் அகத்தவத்தால்,
ஐந்துபுலன் வென்று ஆட்சி யேறும்.
அறிவின் ஆற்றல் பெருகும். அகன்றுவிரிந்து
ஆராயும் நுட்பம் ஓங்கும்.
அறிவு தன்னிலை உணரும் அந்நிலையில்,
அதுவே மெய்ப்பொருளாய் நிற்கும்!
அறிவு உயர்வுக்கேற்ப அன்புகருணை ஈகை
தொண்டிவை தன்னியல்பாய் ஓங்கும்." (ஞாக.பா.1494)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 24. ஒரு ஆசை ஒரு பாடம்
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

நதிக்கரையில் ஒரு ஜென் குருவும் அவரின் சீடர்களும் முகாம் இட்டிருந்தார்கள்.

அருகில் உள்ள கிராமங்களுக்குச் சென்று பிச்சையெடுத்து உண்பார்கள். தினந்தோறும் ஏதாவது ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்வார்கள்.

அந்த வழியாகச் சென்ற அரசன் அவர்களைப் பார்த்தான்.

“நாளை எனது அரண்மனையில் ஒரு விஷேசம். நான் உங்கள் அனைவருக்கும் அறுசுவை விருந்து கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். அனைவரும் சரியாகப் பத்து மணிக்கு வந்து விடுங்கள்” என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

சீடர்களுக்கு ஒரே குஷி.

நாம் இவ்வளவு நாட்கள் மக்களிடம் பிச்சையெடுத்துச் சாப்பிட்டோம். தற்போது அரணமனை விருந்துக்கு அழைப்பு வந்திருக்கிறது.

என்னென்ன சுவை மிகுந்த பதார்த்தங்களை விருந்தில் பரிமாறுவார்களோ? என்று மனதிற்குள் கற்பனை செய்தபடி சந்தோஷமாகத் தூங்கச் சென்றார்கள்.

அடுத்தநாள் கலையில் ஒன்பது மணிக்கே சுறுசுறுப்பாக தயாராகி விட்டார்கள்.

வழக்கம் போல் தங்கள் பிரார்த்தனையை முடித்துக் கொண்டு அரண்மனையை நோக்கிச் சென்றார்கள்.

அரண்மனை பிரதான வாயில் அருகே அவர்கள் சென்ற போது, ஓடோடி வந்த ஒரு ஊழியன் அரசர் அவசர வேலையாக வெளியூருக்கப் போய்விட்டதால் விருந்து இன்று நடைபெறவில்லை என்று தகவல் தெரிவித்தான்.

“அப்படியா மிகவும் நல்லது. மிக்க நன்றி” என்று கூறிய குரு திரும்பினார்.

“சாப்பாட்டுக்கு இப்ப என்ன செய்வது குருவே?” என்று பரிதாபமாகக் கேட்டார்கள் சீடர்கள்.

“இத்தனை வருடங்களாக எப்படிச் சாப்பிட்டோம் என்பது உங்களுக்கு அதற்குள் மறந்து விட்டதா? ஒரே ஒரு ஆசை எப்படியெல்லாம் விடையாட்டுக் காட்டுகிறது பார்த்தீர்களா? என்று கூறினார்.

“இன்றைய பாடத்தை நல்ல முறையில் நாம் அனைவரும் கற்றுக் கொண்டோம்” என்ற திருப்தியில் வழக்கம் போல பிச்சைக்குக் கிளம்பினார்கள் சீடர்கள்.

“இச்சையைப் புள்ளியாய் நிறுத்தப் பழகிடு!
இச்சை விரிந்தால் ஆராய்ச்சி ஆக்கிடு,
இச்சை விரிந்து பேராதார நிலை எய்த,
இச்சை புலன்களை வென்று நிலைபெறும்.”
(ஞாக.பா.1555)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 25. மன நிறைவாக வாழ என்ன செய்ய வேண்டும்? (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் குரு ஒருவர் தன்னுடைய சீடர்களுக்குக் கூறிய திபெத்திய நாடோடிக் கதை இது.

ஒரு கிராமத்தில் இரண்டு சகோதரர்கள் வசித்து வந்தனர்.

அண்ணனிடம் 99 பசுக்கள் இருந்தன. தம்பியிடம் ஒரே ஒரு பசு இருந்தது.

இருந்த ஒரு பசுவில் பால் கறந்து வீட்டில் உள்ள அனைவரின் தேவைக்கு எடுத்தது போக மீதியிருந்த பாலை அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுக்கு விற்று அதில் வரும் பணத்தை மற்ற தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வான்.

கொஞ்சமாக நிலமும் இருந்தது.  அதில் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்தான்.

பயிர்கள் செழித்து வளர்ந்தன.  அதைக் கொண்டு தன் வாழ்வை மிகவும் நிம்மதியாக, மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தான்.

ஆனால் 99 பசுக்கள் வைத்திருந்த அண்ணனோ மகிழ்ச்சியாக இல்லை.  இன்னும் ஒரே ஒரு பசு வாங்கி விட்டடால் நூறு பசுவாகி விடும் என்ற நினைப்போடு அலைந்து திரிந்தான்.

ஒருநாள் அண்ணனைப் பார்ப்பதற்காகத் தம்பி வந்தான்.

“தம்பி உன்னிடம் இருக்கும் ஒரு பசுவும் தொலைந்து போய்விட்டால் என்ன செய்வாய்?” என்று கேட்டான்.

“கொஞ்சநாள்  கஷ்டமாக இருக்கும், அப்புறம் என்ன செய்வது? அதை மறந்துவிட்டு மற்ற வேலைகளைப் பார்க்க வேண்டியதுதான். அது ஒன்றும் பெரிய இழப்பாகத் தெரியாது என்று இயல்பாகச் சொன்னான் தம்பி.

உன்னிடம் இருப்பதே அது ஒன்றுதான் என்பதால் அது உனக்குப் பெரிய இழப்பாகத் தெரியாது.

என்னைப் பார் 99 பசுக்களை வைத்துக் கொண்டு அதை நூறாக்குவதற்காக அலைந்து கொண்டிருக்கிறேன்” என்று மன ஆதங்கத்தோடு சொன்னான் அண்ணன்.

“வேணும்ணா நீ என்னிடம் இருக்கும் ஒரு பசுவை வைத்துக் கொள்” என்று உடனே சொன்னான் தம்பி.

- “மனநிறைவாக வாழ்வதற்கு இறை உணர்வும் உயிர் உணர்வும் வேண்டும். (வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள்)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 26. மக்களா? சூத்திரமா?

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜப்பானை சேர்ந்த ஜென் குரு டெட்சாகன் புத்த மத சூத்திரங்கள் அனைத்தும் சீன மொழியில் உள்ளன. அவற்றை ஜப்பானிய மொழியில் வெளியிட வேண்டும் என்று நினைத்தார்.

அந்த காலத்தில் நூல் வெளியிடுவது பெரிய முயற்சியாக இருந்தது.

அதற்காக பலரிடம் நன்கொடை கேட்டார். சிறிய தொகை கொடுத்தாலும் பெரிய தொகை கொடுத்தாலும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

நன்கொடை தந்தவர்களிடம் எந்த வேறுபாடும் காட்டவில்லை.

ஐந்து ஆண்டுகள் கழிந்தன. போதுமான பணம் சேர்ந்ததை அறிந்தார் அவர்.

அப்போது அந்த நாட்டில் பெரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. மக்கள் சொல்ல முடியாத துன்பத்திற்கு ஆளானார்கள்.

திரட்டிய செல்வத்தை எல்லாம் மக்களின் துயரத்தைப் போக்கச் செலவு செய்தார்.

மீண்டும் பணம் திரட்டத் தொடங்கினார். ஐந்து ஆண்டுகளில் ஓரளவு தொகை சேர்ந்தது.

அப்போது அந்த நாட்டைத் தொற்று நோய் ஒன்று தாக்கத் தொடங்கியது. பலர் இறந்து போனார்கள். தான் சேர்த்து வைத்த தொகையை மக்களுக்குச் செலவு செய்தார்.

மூன்றாம் முறையாகப் பணம் திரட்டத் தொடங்கினார். ஐந்து ஆண்டுகளில் போதுமான தொகை சேர்ந்தது.

இந்த முறை அவர் எண்ணம் நிறைவேறியது. புத்த சூத்திரங்களை ஜப்பானிய மொழியில் வெளியிட்டார்.

ஜப்பானிய மக்கள் தங்கள் குழந்தைகளிடம் "துறவி டெட்சாகன் மூன்று முறை புத்த சூத்திரங்களை நூலாக வெளியிட்டார். முதல் இரண்டு நூல்களும் கண்ணுக்குத் தெரியாதவை. மூன்றாவது நூலைவிட அவை இரண்டும் சிறந்தவை" என்றார்கள்.

### உண்மையான தொண்டு யாது? – வேதாத்திரியம்.

"உயிர்கட்குப் பசி, வெப்ப தட்பம். காமம்
 உணர்ச்சிகள் பொதுவாகும். இவற்றைத் தீர்க்க
உயிர்களெல்லாம் தேவை, சூழ்நிலை, பழக்கம்
 ஒக்க தம் முயற்சியினைப் பயன்படுத்தும்,
உயிர்களிலே பிற உயிரின் உணர்ச்சி கூர்ந்து,
 உணர்ந்து, ஒத்துதவம் பேராற்றல் பெற்ற
உயிரினமே மனிதனெனும் உயர் தோற்றமாம்
 உண்மையினை உணர்ந்தொழுகல் உயர் நோன்பாகும்"
(ஞாக.பா.651)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 27. அதிர்ச்சி இல்லாமலா?

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் குரு தம் சீடர்களிடம் "எப்போதும் நாம் கவனமாக இருக்க வேண்டும். எது நடந்தாலும் அதிர்ச்சி அடையக் கூடாது. எப்போதும்

இருப்பது போல இயல்பாக இருக்க வேண்டும்" என்று அறிவுரை சொன்னார்.

அதைக் கேட்ட அவர்கள் எது நடந்தாலும் குரு அதிர்ச்சி அடையாமல் இயல்பாக நடந்து கொள்வரா? என்பதை அறிய விரும்பினார்கள்.

என்ன செய்வது என்று ஒன்று கூடிப் பேசினார்கள்.

"இரவு நேரத்தில் வழிய வழிய நீேர்க் கோப்பையுடன் தன் அறைக்குச் செல்வதைக் குரு வழக்கமாக பழக்கமாக வைத்திருக்கிறார்.

கொதிக்கும் தேநீரை அங்கே குடிக்கிறார். அவர் தேநீர் கோப்பையை எடுத்துச் செல்லும் போது நாம் அனைவரும் அவரைப் பயமுறுத்துவோம்.

அதிர்ச்சி அடைவார் அவர். கோப்பையில் இருந்து தேநீர் கீழே சிந்தும்" என்றான் ஒருவன்.

"அப்படியே செய்வோம் என்றான் மற்றவன்.

இரவு நேரம். எங்கும் இருட்டாக இருந்தது.

கொதிக்கும் தேநீர்க் கோப்பையைக் கையில் பிடித்தபடி தன் அறையை நோக்கி வந்து கொண்டிருந்தார் குரு,

கோப்பையில் தேநீர் வழிய வழிய இருந்தது.

இந்த நிலையில் சிறு அதிர்ச்சி ஏறபட்டாலும் கை நடுங்கும். கோப்பையில் உள்ள தேநீர் கீழே சிந்தும் என்று சீடர்கள் உறுதியாக நம்பினார்கள்.

அந்த இருட்டில் அவர் முன் குதித்த சீடர்கள் "ஆ! ஊ!" என்று கூச்சல் போட்டார்கள்.

அவர் எடுத்த வந்த கோப்பையில் இருந்த தேநீர் சிறிதும் சிந்தவில்லை.

இதைப் பார்த்த சீடர்கள் ஏமாற்றம் அடைந்தார்கள்.

அறையை அடைந்த குரு தேநீர் பாத்திரத்தை மேசையின் மேல் வைத்தார். "ஆ!" என்று அலறினார்.

## ஓர்மை நிலைப் பயிற்சி - வேதாத்திரியம்

"நினைப்பும் மறப்பும் அற்று இருக்க நீ பழகிக்கொள். புலன்கள் அனைத்தும் அடிமையாம். அமைதி கிட்டும் ஆங்கே.
ஒன்றையும் நினையாது, உன்னையும் மறவாது,
நின்ற நிலையே அது, நீயறி. நினைவை நிறுத்தி." (ஞாக.பா.1573)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 28. ஞானம் பெறும் ஆர்வம் (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் ஞானி ஒருவரிடம் இளைஞன் ஒருவன் வந்தான்.

அவரைப் பணிவாக வணங்கிய அவன் "தங்களிடம் ஞானம் பெற வந்துள்ளேன். என்னை தங்கள் சீடனாக ஏற்று அருள வேண்டும்?" என்று வேண்டினான்.

அவனைத் தட்டிக் கழிக்க விரும்பினார் ஞானி.

“என் ஆசிரியர் எனக்கு கற்றுத் தந்தது இதுதான். பிறப்பையும் இறப்பையும் இயல்பாக எடுத்து கொள். இதுதான் ஞானம் என்றார். நான் சொல்வது உனக்குப் புரிகிறதா?” என்று கேட்டார்.

“புரிகிறது” என்றான் அவன்.

“அப்படியானால் ஞானம் பெற்று விட்டாய் நீ. மேலும் கற்க என்னிடம் ஒன்றும் இல்லை” என்றார் ஞானி.

“பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே நான் எதை ஏற்றுக் கொள்வது? எதை விடுவது? இதை உங்களிடம் கற்றுக் கொள்ள விரும்புகிறேன்” என்றான் அவன்.

அவனைத் தம் சீடனாக ஏற்றுக் கொண்டார் அவர்..

### பிறவியின் நோக்கம் வெற்றிபெறும் – வேதாத்திரியம்.

“மனிதனாய்ப் பிறந்தவர்கள் எல்லோரும், வாழ்வில்
   மண்ணுலகப் பொருள்வளமும் புலன்இன்பம் துய்த்து,
புனிதமெனும் இறையுணர்ந்து. பிறவித்தொடர் போக்க
   பொருந்திய வாறறிவு உடல் ஆற்றல்கள் உளன.
தனிப்பிரிவாய் சிலர்தெய்வத் தொண்டேற்று, உலகைத்
   தங்கள் விருப்பமொக்கத் தடம்மாற்றி விட்டார்.
இனியென்ன? இறையருளே அனைத்தியக்க ஆற்றல்
   எனும்நூலாய் வந்துள்ளது. ஏற்றுப்பயன் காண்போம்.”
(ஞாக.பா.1732)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 29. தன்னை அறிதல்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் சமயத்தைச் சீன நாட்டில் முதன் முதலில் அறிமுகப் படுத்தியவர் ஜப்பானியரான கருவா அவர்கள். அவரைப் பற்றி வழங்கும் கதைகளில் ஒன்று.

கருவா அவர்கள் சீன நாட்டிற்கு வந்தார். ஜென் சமயத்தைக் கற்றுக் கொண்டார். மக்கள் அதிகம் வந்து போகாத மலைப் பகுதியில் தங்கினார். எப்போதும் தியானம் செய்து கொண்டிருந்தார்.

அவரைப் பற்றி அறிந்து கொண்ட மக்கள் கூட்டமாக அவரிடம் வந்தார்கள், அருளுரை வழங்க வேண்டும் என்று வேண்டினார்கள்.

அவர்களிடம் ஒரிரு சொற்களைச் சொன்னார் அவர்.

பிறகு அங்கிருந்து மக்கள் எளிதில் வர முடியாத மலைப் பகுதிக்குச் சென்று விட்டார்.

அவருடைய புகழ் எங்கும் பரவியது. ஜப்பானிய பேரரசர் அவரைப் பற்றி அறிந்தார்.

ஜப்பானிய நாடு திரும்பிய அவரை பேரரசர் அரசவைக்கு அழைத்தார். அவரும் வந்தார்.

அவரை வணங்கிய பேரரசர் "உங்கள் ஞானத்தை வெளிப்படுத்தவும் மக்கள் பயன் பெறவும் நீங்கள் அறிந்ததைச் சொல்லுங்கள்" என்று வேண்டினார்.

இடுப்புப் பட்டையில் இருந்த புல்லாங்குழலை எடுத்தார்.

இனிமையாக ஒரு வரிப் பாடலை இசைத்தார்.

எல்லோரையும் பணிவாக வணங்கிய அவர் அங்கிருந்து சென்றார்.

ஜென்னை யாரும் கற்பிக்கவும் முடியாது. யாரும் கற்கவும் முடியாது என்பதுதான் அந்தப் பாடலின் வரி.

அவனில் அணு – அணுவில் அவன் உன்னில் எல்லாம் உன்னை நீ அறி – வேதாத்திரியம்.

தன்னை அறிந்து முழுமை பெற வாரீர்! வேதாத்திரியம்.

"தெய்வத்தின் திருவிளையாட்டரங்கமே உடலுயிர். இவ்
வுய்யும் ஒருபெருமை உலகமக்கள் உணர்வதற்கு
மெய்விளக்கத் தவவிளக்கம் மேலாம். தத்துவத் தெளிவு
செய்வதுதான் சிறந்ததொண்டு. சிந்தனை மிக்கோர் சேர்வீர்!"
(ஞாக.பா.301)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 30. இயல்பாய் இருத்தல்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

இரண்டு ஜென் குருக்கள் நண்பர்களாக இருந்தனர். அவர்கள் மாலை நேரத்தில் காற்று வாங்குவதற்காக மெதுவாக நடந்து செல்வது வழக்கம்.

அன்றும் அப்படித்தான் அவர்கள் ஓய்வாக நடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

ஆற்றின் ஓரமாக அவர்கள் நடந்து கொண்டிருந்தபோது அவர்கள் கண்ணெதிரிலேயே ஒரு தேள் தவறிப்போய் ஆற்றில் விழுந்ததைப் பார்த்தார்கள்.

உடனே அவர்களில் ஒருவர் பதைபதைத்துப் போய் அதை வெளியில் எடுக்க முயற்சித்தார்.

அவரின் கையில் அது கடுமையாகக் கொட்டியது.

உடனே தவறிப்போய் மீண்டும் ஆற்றில் விழுந்தது.

அவர் மீண்டும் அதை எடுக்க முயற்சித்தார்.

அது மீண்டும் கடுமையாகக் கொட்டியது.

மறுபடியும் தவறிப்போய் தண்ணீரில் விழுந்தது.

இந்தச் செயல் பலமுறை மீண்டும் மீண்டும் நடந்தது.

"அதுதான் உங்களைத் திரும்பத் திரும்பக் கொட்டுகிறதே. அதை ஏன் காப்பாற்றுகிறீர்கள்?" என்றார் மற்றொரு குரு.

"கொட்டுவது அதன் இயல்பு. காப்பாற்றுவது என் இயல்பு. நான் எந்தச் சூழலிலும் என் இயல்பை மாற்றிக் கொள்வதாக இல்லை" என்று கூறிய அவர் ஒரு கம்பைக் கொண்டு அந்தத் தேளைக் காப்பாற்றிக் கரையில் விட்டுவிட்டே அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

மற்றொருவர் அன்றைய தினம் ஒரு பாடம் கற்றுக் கொண்ட மகிழ்ச்சியுடன் அவரைப் பின் தொடர்ந்தார்.

## இயல்பும் உயர்வும் - வேதாத்திரியம்

"அறிவை உணர்ச்சி வெல்லுவது இயல்பு!
அறிவால் உணர்ச்சியை வெல்லுவது உயர்வு!" (ஞாக.பா.1209)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 31.யார் முன் நிற்கிறாய்?

(ஜென்னும் வேதாத்திரியமும்)

தளபதி ஒருவர் நிறைய வீரர்களுடன் ஒரு நாட்டிற்கு படையெடுத்தார்.

எல்லைப் பகுதியில் இருந்த ஒவ்வொரு ஊராகக் கைப்பற்றிக் கொண்டு வந்தார்.

விரர்களுடன் அவர் ஓர் ஊரை அடைந்தார்.

அவரை வணங்கிய வீரன் ஒருவன் "நம்மை எதிர்ப்பதற்கு இந்த ஊரில் யாரும் இல்லை. எல்லோரும் ஓடி விட்டார்கள். புத்தர் கோயிலில் ஜென் குரு ஒருவர் மட்டும் உள்ளார்? என்றான்.

எல்லோரும் ஓடி விட்டார்கள், இவர் மட்டும் ஏன் ஓடாமல் இங்கேயே இருக்கிறார் என்பதை அறிய விரும்பினான் அவன்.

கோயிலுக்குள் சென்றான். அங்கிருந்த ஜென் குரு அவனை வணங்கவும் இல்லை. அங்கிருந்து செல்லவும் இல்லை.

தனக்கு அவர் அஞ்சவில்லை. தன்னை வணங்கவில்லை என்பதை அறிந்து கடுங்கோபம் கொண்டான்.

வாளை உருவிய அவன் "முட்டாளே! யார் முன் நிற்கிறாய் என்பதை நீ அறியவில்லையா? கண் இமைப்பதற்கு முன் உன் உயிர் உடலை விட்டுப் பறந்து விடும்" என்று கண்கள் சிவக்கக் கத்தினான்.

எந்தப் பதற்றமும் அடையாத ஜென்குரு அமைதியாக "கண் இமைப்பதற்கு முன் ஓட்டம் பிடிக்கும் மனிதன்தான் என் முன் நிற்கிறான்" என்றார்.

## ஞானியின் அஞ்சாமை அகத்தவமே – வேதாத்திரியம்.

"அறிவு உயிரை நோக்கும்அகத்தவத்தால்,
ஐந்துபுலன் வென்று ஆட்சி யேறும்.
அறிவின் ஆற்றல்பெருகும். அகன்று விரிந்து
ஆராயும் நுட்பம் ஓங்கும்."

(ஞாக.பா.1494)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 32. நல்ஒழுக்கமும் நன்மையும்
### (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவி ஹாகுய்ன் தன் இளவயதில் நடந்த கதையாக அடிக்கடி தன்னுடைய மாணவர்களுக்கு சொல்லும் கதை.

மனதில் வெறுமை நிலையை அடைவதற்காக ஜென் துறவிகள் தியானம் புரிவது வழக்கம்.

உள்ளுணர்வுகளின் மனக்கற்பனைகளை அழித்து புலனுணர்வுகளால் தூண்டப்படாத உண்மையான மெய்ஞானத்தினை அடைவதே ஜென் தியானத்தின் நோக்கமாகும்.

வாலிபனாக இருந்த போது ஜென் ஆசிரியர்களை சந்திப்பதற்காக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு ஹாகுய்ன் செல்வது வழக்கம்.

ஒரு சமயம் ஹாகுய்ன் மற்ற இரண்டு புத்த துறவிகளுடன் மற்றொரு இடத்திற்குச் சென்று கொண்டிருந்தார்.

அதில், ஒரு துறவியானவர் மிகவும் உடல் நிலை சரியில்லாமல் களைப்படைந்து சோர்வடைந்திருந்தார்.

அவர் தன்னுடைய தோலில் தொங்கிய பயண மூட்டையையும் ஹாகுயினை எடுத்துக் கொண்டு வருமாறு வருந்தி வேண்டிக் கேட்டு கொண்டார்.

வேண்டுகோளை ஏற்று அவருடைய மூட்டையையும் தானே எடுத்துக் கொண்டான் வாலிபனான ஹாகுய்ன்.

மனதினை வெறுமையில் ஒருமுகப் படுத்தி இன்னொரு மூட்டை இருப்பதாகவே எண்ணிக் கொள்ளாமல் நடந்து சென்று கொண்டிருந்தார்.

அவர்களுடன் வந்து கொண்டிருந்த மற்றொரு துறவி ஹாகுயினுடைய வாலிபப் பருவத்தினையும் உதவி செய்யும் ஆற்றலையும் கண்டு தானும் உடல் நிலை சரியில்லாதவன் போல் பாவனை செய்து தன்னுடைய மூட்டையையும் ஹாகுயினை எடுத்துக் கொண்டு வருமாறு கூறினார்.

மற்றவர்களுக்கு உதவும் புத்தத் தர்மத்தின் படி மூன்றாவது பயண மூட்டையையும் தன்னுடன் எடுத்துக் கொண்ட ஹாகுய்ன், முன்பைவிட ஆழமாக மனதினை வெறுமையில் மூழ்கச் செய்து கொண்டு அவர்களுடன் நடந்து சென்று கொண்டிருந்தார்.

மூவரும் இனி படகில் மட்டுமே பயணத்தினை தொடர முடியும் என்ற நிலயையில் ஒரிடத்தினை அடைந்தனர்.

படகில் ஏறி மூட்டைகளை வைத்த ஹாகுய்ன் பயணக் கலைப்பின் காரணமாக பலவீனமாகி மூட்டைகளுக்கு நடுவிலேயே படுத்து நன்றாக உறங்கி விட்டார்.

விழித்து எழுத்த போது ஹாகுயினால் தான் எந்த திசையில் இருக்கிறோம் என்பதையே கண்டு பிடிக்க முடியவில்லை.

கரையை அடைந்தது போல் இருந்த அவருக்கு பயணத்தின் எந்த நினைவுமே இருக்கவில்லை.

ஏதோ மிகவும் மோசமான கெட்ட நாற்றம் அடிப்பதையும் உணர்ந்த ஹாகுய்ன் சுற்றும் முற்றும் பார்த்தார்.

மற்ற அனைவரும் முகமெல்லாம் வாடி வாயெல்லாம் வாந்தியுடன் படுத்துக் கொண்டிருந்தனர்.

பயணத்தின் போது அடித்த பேய் சுழற்காற்றில் படகு பேயாட்டம் ஆடி கடற்குமட்டல் நோய்க்கு படகோட்டி உட்பட அனைவரும் ஆட்பட்டிருந்தனர்.

ஹாகுய்ன் மற்ற இருவரின் மூட்டைகள எடுத்துக் கொண்டு வந்த களைப்பினால், தன்னிலையே மறந்து, பேய் சுழற்காற்று அடித்ததோ தெரியாமல் பயண முழுவதும் தூங்கி விட்டிருந்தார்.

அதனால் கப்பல் பிரயாணத்தில் ஏற்படும் கடற்குமட்டல் நோயிலிருந்து தப்பி விட்டிருந்தார்.

இந்த கதையை தன் சீடர்களிடம் கூறிய ஹாகுயின் “என்னுடைய வாழ்நாள் அனுபவ அறிவானது என்ன தெரியுமா? நம்மிடம் மறைந்திருக்கும் நல்லொழுக்கமானது எப்பொழுதுமே நன்மையையே தரும் என்ற உண்மையினை அறிய உதவியது” என்றார்.

## இன்னா செய்ய நோன்பு – வேதாத்திரியம்

“ஒழுக்கமெனில் உயிர்க்கு இன்னா செய்யா நோன்பாம்.
    ஒருவர் பிறர்க்கோ, தனக்கோ, உடனோ, பின்னோ,
வழுக்கியும் தீமைசெய்ய உணர்வு அஃது.
    வாழ்வோர்க்கு இதற்மேல் என்ன வேண்டும்?
அழுக்காறு, பேராசை, சினம் கடுஞ் சொல்
    ஐந்து பெரும் பழிச்செயல்கள் தவிர்த்த வாழ்வால்,
பழுத்துவரும் அறிவு பரஉணர்வு ஊறும்.
    பன்னலமும் அறநெறியும் இயல்பாயப் போகும்.” (ஞாக.பா.452)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 33. எந்த வழியில் வந்தாலும்
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவி ஒருவர் சீடர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

அங்கே வந்த ஒருவர் துறவியை வணங்கினார்.

“ஞானம் பெறுவதுதான் புத்தரை அடையும் வழி என்றீர்கள். அந்த வழியில் என்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளேன்” என்றார்.

“தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். வெற்றி பெறுவீர்கள்” என்று அவரை வாழ்த்தி அனுப்பினார் துறவி.

அவர் சென்றதும் இன்னொருவர் துறவியை வணங்கினார். “புத்தரின் பெருமைகளை எண்ணி உருகிக் கண்ணீர் வடிப்பது. அவர் புகழைப் பாடுவது. புத்தர் பெருமானை அடையும் வழி என்றீர்கள். அந்த வழியிலேயே முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்” என்றார்.

“உங்கள் முயற்சி நல்ல முயற்சி, நீங்கள் புத்தர் பெருமானை அடைவீர்கள்” என்று அவரையும் வாழ்த்தி அனுப்பினார். துறவி.

மூன்றாவதாக இன்னொருவர் வந்தார்.

துறவியை வணங்கியவர் “துறவியர்களுக்குத் தொண்டு செய்வதும் எல்லோர்க்கும் அன்பு காட்டுவதும் புத்தர் பெருமானை அடையும் வழி என்றீர்கள். நீங்கள் சொன்னது போலவே செயல்படுகிறேன்” என்றார்.

“நல்ல செயல் செய்கிறீர்கள். நீங்கள் புத்தர் பெருமானை அடைவீர்கள்” என்று அவரையும் வாழ்த்தி அனுப்பினார் துறவி.

நடந்ததை எல்லாம் பார்த்த சீடர்கள் குழப்பம் அடைந்தார்கள்..

அவர்களில் ஒருவர் “குருவே! உங்களைத் தேடி வந்த மூவருக்கும் இறைவனைக் காண வெவ்வெறு வழிகளைச் சொன்னீர்கள்.

இவற்றுள் எது புத்தர் பெருமானை அடையும் வழி? எங்களுக்கு குழப்பமாக உள்ளது" என்று கேட்டார்.

"இந்த மூன்று வழிகளில் எந்த வழியில் சென்றாலும் புத்தர் பெருமானை அடையலாம். முதலாவது ஞான வழி. இரண்டாவது பக்தி வழி. மூன்றாவது சங்கம வழி. இந்த மூன்று வழிகளில் எதுவும் உயர்ந்ததும் இல்லை. தாழ்ந்ததும் இல்லை. மூன்றும் இணையானவவை" என்று விளக்கினார்.

பக்தி - யோகம் – ஞானம் - வேதாத்திரியம்.

"அறிவு அறிவுக்கு அடிமையாவதே பக்தி.
அறிவை அறிவால் அறியப்பழகுதல் யோகம்
அறிவை அறிவால் அறிந்த நிலையே முக்தி.
அறிவை அறிந்தோர் அன்பின் அறமே ஞானம்."
(ஞாக.பா.1356)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 34.இயற்கை அழகே அழகு
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

புகழ் பெற்ற ஜென் கோயில் அது. அந்தக் கோயிலின் பின் பகுதியில் பெரிய தோட்டம் ஒன்று இருந்தது.

அந்தத் தோட்டத்தை இளந்துறவி ஒருவர் நிர்வகித்து வந்தார்.

பூச் செடி, கொடி, மரங்களை வளர்ப்பதில் மிகுந்த ஈடுபாடு காட்டினார் அவர். அதனால் அந்தத் தோட்டம் கண்ணைக் கவரும் அழகுடன் விளங்கியது.

இளந்துறவியை அழைத்த தலைமைத் துறவி "நம் கோயிலுக்கு முதிய துறவி ஒருவர் வருகை தர உள்ளார். எல்லோரும் மதித்து

வணங்கும் துறவி அவர். தோட்டத்தை அவர் பார்வை இடுவார். தோட்டம் மேலும் அழகாக இருக்க வேண்டும்" என்றார்.

"அவர் வரும் போது தோட்டம் அவரைக் கவரும்படி இருக்கும்" என்று உறுதியுடன் சொன்னார் இளந்துறவி.

தோட்டதிற்கு வந்த இளந்துறவி அங்கிருந்த களைகளை எல்லாம் பிடுங்கினார். செடிகளை வெட்டி அழகு படுத்தினார்.

தோட்டத்தில் விழுந்து கிடந்த காய்ந்த இலைகளை ஆங்காங்கே அழகாகக் குவித்து வைத்தார். தோட்டத்தில் எங்கும் காய்ந்த இலையோ சருகோ இல்லாமல் பார்த்துக் கொண்டார்

வருகை தரும் துறவி தோட்டத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைவார். தோட்டத்தைப் பராமரிக்கும் தன்னைப் பாராட்டுவார் என்று நினைத்தார்.

முதிய துறவி அந்தத் தோட்டத்தைப் பார்வை இட்டார்.

"இந்த அழகான தோட்டம் உங்களைக் கவர்ந்து இருக்க வேண்டும்" என்றார் இளந்துறவி.

"தோட்டம் அழகாகத்தான் உள்ளது. பொன்னொளி பாயுமானால் இன்னும் அழகாக இருக்கும்" என்றார் அவர். அங்கே குவியலாகக் கிடந்த காய்ந்த இலைகளையும் சருகுகளையும் பார்த்தார்.

அவற்றைக் கைகளால் வாரி நாலா பக்கமும் வானத்தில் எறிந்தார். காற்றில் அசைந்து அசைந்து அவை தோட்டத்தில் எல்லா இடங்களிலும் விழுந்தன.

"எவ்வளவு அழகாகப் பொன்னொளி வீசுகிறது? இப்போதுதான் தோட்டம் கண்ணைக் கவரும் அழகுடன் விளங்குகிறது" என்று மகிழ்ச்சி பொங்கச் சொன்னார்.

### இயற்கையை மதித்து வாழ - வேதாத்திரியம்.

“இயற்கை வளத்தை வாழ்வின் வளமாய் மாற்றும்
 எத்தொழிலைப் புரிவோரும் இனிது வாழ்க!
இயற்கையின் பேராற்றல் அகத்தில் விண்ணில்
 இயங்குமுறை விளைவு உணர்ந்து உரைப்போர் வாழ்க!
இயற்கைச் சட்டம் மதித்து மக்கள் வாழ
 ஏற்றபடி அரசாளும் தலைவர் வாழ்க!
இயற்கைதரும் உணவுமணி பொங்கி உண்டு
 இன்றுலகை உளம்போங்க வாழ்த்தி வாழ்வோம்.” (ஞாக.பா.779)


வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 35. ஞானம் பெற்ற பின்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் மாணவராகவும் புகழ் பெற்ற அறிஞராகவும் ஒருவர் இருந்தார்.

நூல்களைப் படிப்பதில் அவர் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.



தான் படித்த நூல்களை எல்லாம் சேர்த்து வைத்தார். அவரிடம் எண்ணற்ற நூல்கள் சேர்ந்தன.

திடீரென்று ஒருநாள் அவர் ஞானம் பெற்றார்.

ஞானம் பெற்றதும் அவர் செய்த செயல்கள் எல்லோர்க்கும் வியப்பைத் தந்தன.

தன்னிடம் இருந்த நூல்களை எல்லாம் எரித்து தீக்கரையாக்கி விட்டார்.

### ஞானிகளின் கருத்தாராய்வீர் – வேதாத்திரியம்.

“தனிமனிதன் கடமைகளும், கூட்டு வாழ்வின்
    தத்துவமும் அடங்கியுள்ள இ ந் திட்டத்தால்
மனிதஇனம் பஞ்சமகா பாத கத்தை
    மனத்தினிலே நினைந்திடவும் வழியே இல்லை!
புனிதர்களாம் புத்தர், ஈயேசு, நபிகள், காந்தி,
    பூஜ்யர் பரஞ்சோதி மற்ற ஞானியார்கள்
கனிவுடனே உலகமக்கள் உயர்வாய் வாழ்க
    கண்டகனவும் செயலில் மலர்ந்து நிற்கும்” (ஞாக.பா.977)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 36. அச்சத்திற்கு என்ன காரணம்? (ஜென்னும் வேதாத்திரியமும்)

அச்சத்திற்கு என்ன காரணம்? என்பதை விளக்க ஜென் குரு தனது சீடர்களுக்கு ஒரு கதை சொன்னார்.

ஒரு நாட்டின் படைத் தலைவருக்கு அரசன் விலை உயர்ந்த பளிங்குக் கோப்பை ஒன்றைப் பரிசாகத் தந்தான்.

பரிசாகக் கிடைத்த கோப்பையைப் பார்த்துப் பெருமிதம் கொண்டார் அவர். மேசையின் மேல் கோப்பையை வைத்துச் சிறிது தொலைவில் நின்று அதன் அழகைப் பார்த்தார்.



அருகே வந்து அந்தக் கோப்பையைப் பார்த்தார். அன்புடன் அதைத் தடவிக் கொடுத்தார்.

கோப்பையைக் கையில் எடுத்தார். அதை மேலே தூக்கிப் போட்டு விளையாட்டாகப் பிடித்துக் கொண்டிருந்தார்.

அப்படித் தூக்கிப் போடும் போது அவர் யைில் இருந்து நழுவியது கோப்பை. கீழே விழுந்து உடைந்து விடுமோ என்று பதறினார் அவர்.

கோப்பை தரையில் விழுவதற்கு முன் முயற்சி செய்து பிடித்துக் கொண்டார்.

போர்க்களத்தில் எத்தனையோ வீரர்கள் என்னைச் சூழ்ந்தபோதும் நான் அச்சம் கொண்டது இல்லை. அவர்களுடன் வீரத்துடன் போர் செய்தேன்.

இந்தக் கோப்பை கீழே விழுந்து நொறுங்கி விடும் என்ற அச்சம் எதனால் ஏற்பட்டது என்று சிந்தித்தார்.

கோப்பையின் மீது கொண்ட பற்றே காரணம் என்பது அவருக்குப் புரிந்தது.

அன்றே அந்தக் கோப்பையை உடைத்து எறிந்தார்.

- மனிதன் அனுபோக அனுபவ ஆராய்ச்சிகளினால் அறிவு வளர்ச்சி பெற்ற தன்னிலை விளக்கம் பெறும்போது உருவ அளவிலே மனிதர்கள் வேறுபட்டிருந்தாலும் உயிர் என்ற நிலையில் ஒன்றுபட்டே ஏகமாகவே இருப்பது அறிவிற்கும் தெளிவாக விளங்கி விடுகிறது. அப்போது பிரபஞ்சத்தில் உள்ள சில பொருட்களை மாத்திரம் தனதென்று எண்ணிக் கொள்ளும் பற்றுதல்கள் தானாகவே விடுபட்டுப் போகின்றன. (வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள்)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 37. குருவின் அன்பு அடிப்பதா?

### (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் குரு ஒருவரிடம் நிறைய சீடர்கள் பயின்று வந்தார்கள்.

அவர்களில் ஒரு சீடன் ஞானம் தேடிப் புறப்படுவதாகவும் ஞானம் பெற்ற பிறகுதான் திரும்புவதாகவும் சொன்னான்.

“சென்று வா” என்றார் குரு.

அவன் அங்கிருந்து புறப்பட்டான்.

சீடர்களிடம் குரு “ஞானம் தேடிப் புறப்படும் அந்த சீடனை அழைத்து வாருங்கள்” என்றார்.

அவர்களும் சென்று அந்தச் சீடனை அழைத்து வந்தார்கள்.

குரு எதற்காகத் தன்னை அழைத்தார் என்பது அவனுக்குப் புரியவில்லை.

அவரைப் பணிவாக வணங்கினான்.

அவன் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை விட்டார் அவர்.




இதற்கு முன் குரு இப்படி யாரையும் அடித்தது இல்லையே. நான் என்ன தவறு செய்தேன்? குரு ஏன் என்னை அடித்தார்? ஏதேனும் தவறு செய்து இருந்தால் அவரிடம் மன்னிப்பு வேண்டலாம் என்று நினைத்தான்.

கண் கலங்கியபடி “குருவே! என்ன தவறு செய்தேன்? எதற்காக என்னை அடித்தீர்கள்?” என்று புலம்பினான்.

சிரித்த குரு “தவறு செய்தால்தான் அடிப்பார்களா? நினைவுபடுத்த அடிக்க மாட்டார்களா?

ஞானம் தேடிச் செல்கிறாய். அதைப் பெற எங்கெங்கே செல்ல வேண்டுமோ? எவ்வளவு காலம் ஆகுமோ? ஞானம் பெறாமல் நீ திரும்ப மாட்டாய்.

என் நினைவு எப்போதும் இருக்க வேண்டும் என்பதற்காகவே உன்னை அறைந்தேன்

ஞானம் பெற்றுத் திரும்பும் உன்னை என்னால் அடிக்க முடியாது. அதனால்தான் இப்போதே அடித்தேன்” என்றார் குரு.

## குருவின் மேன்மை – வேதாத்திரியம்.

“சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
சீர் அறியச் செய்த குருவே!
அந்தநிலை தனிலறிவு அசைவற்றிருக்கப் பெரும்
ஆனந்தம் பொங்கு தங்கே! (ஞாக.பா.6)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 38.அழிப்பதுதான் வலிமையா?

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

புத்தர் பெருமான் காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தார்.

கொலைகளுக்கு அஞ்சாத கொடிய திருடன் அங்குலிமால் பெருமானை வழி மறித்தான்.

“உன்னைக் கொல்லப் போகிறேன். உன் கடைசி ஆசை என்ன? சொல்” என்று மிரட்டினான்.

கருணை பொங்கும் முகத்துடன் அவனைப் பார்த்தார் புத்தர். அருகில் இருந்த மரத்தைக் காட்டி “இதில் ஒரு கிளையை வெட்ட வேண்டும்” என்றார்

உடனே அவன் தன் கையில் இருந்த கத்தியால் ஒரு கிளையை வெட்டி வீழ்த்தினான். “உன் கடைசி ஆசை நிறைவேறி விட்டதா?” என்று கேட்டான்.

“இன்னும் நிறைவேறவில்லை. அந்தக் கிளையை மீண்டும் மரத்தில் ஒட்ட வைக்க வேண்டும்” என்றார் புத்தர்.

“உமக்கு என்ன பைத்தியமா? வெட்டப்பட்ட கிளையை எவராலும் மரத்தில் ஒட்ட வைக்க முடியாது” என்றான் அவன்.

“நீதான் பைத்தியம். உண்மையான வலிமை என்பது ஒன்றை உருவாக்குவதும் குணப்படுத்துவதும்தான். கொலை செய்வதும் ஒரு பொருளை அழிப்பதும் வலிமை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். நீ செய்வதை ஒரு குழந்தையும் செய்யும்” என் றார் புத்தர்.

புத்த பெருமானின் சொற்கள் அவன் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தன.

திருந்திய அவன் புத்தர் பெருமானின் சீடர்களுள் ஒருவன் ஆனான்.

## அன்பு வழியில் இன்பம் பெருகும் – வேதாத்திரியம்.

"இயற்கையாக அமைந்துள்ள உடல் பலத்தை
இரும்புமுதல் பலவிதமாய் உலோகத் தாலாம்
செயற்கைக் கருவிகளின் மூலம் பெருக்கிக் கொண்டு
சிந்தனையில் அவரவர்கள் உயர்ந்த மட்டில்,
பயிற்சியினால் ஒருவர்பலர் வாழ்வின் ஊடே
பாதகம், சாதகம் விளைக்கும் ஆற்றல் பெற்றோம்.
முயற்சியோடு மனிதஇனம்ஒன்றாய் என்றும்
முறையுடனே வாழஅன்பு வழியில்நிற்போம்." (ஞாக.பா.523)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 39.கருவான நாதவிந்தில் சாதியேது?
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

புத்தர் பெருமானின் சீடர்களில் ஒருவர் ஆனந்தன் ஆவார்.

துறவியான அவர் ஒரு சமயம் காட்டு வழியாக வந்தார்.

தாகத்தால் துடித்த அவர் எங்காவது தண்ணீர் கிடைக்குமா? என்று தேடினார், தேடினார்.

தலையில் தண்ணீர்க் குடத்துடன் பெண்மணி ஒருத்தி அவர் எதிரில் வந்தாள்.

"அம்மா! தாகத்தால் தவிக்கிறேன், தண்ணீர் கொடுங்கள்" என்று கேட்டார் அவர்.

"நான் தாழ்ந்த குலத்தைச் சார்ந்தவள்" என்றாள் அவள்

“அம்மணி! நான் தண்ணீர்தான் கேட்டேன். உங்கள் சாதியைக் கேட்கவில்லை” என்றார் அவர்.

அவள் மகிழ்ச்சியுடன் அவருக்குத் தண்ணீர் தந்தாள்.

தண்ணீர் குடித்துவிட்டு அவர் அங்கிருந்து சென்றார்.

### சாதிஏது? – வேதாத்திரியம்.

“கருவான நாதவிந்தில் சாதியேது? கற்பனையால் நாம் மிரண்டு பேசுகின்றோம்.” (வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 40. வாழ்வினிலே வளம்காண

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவி ஒருவர் தம் மூன்று சீடர்களையும் அழைத்தார்.

“நான் ஒரு கேள்வி கேட்பேன். அதற்குப் பதில் சொல்ல வேண்டும்” என்றார்.

“குருவே! என்ன கேள்வி வேண்டுமானாலும் கேளுங்கள். பதில் சொல்லுகிறோம்” என்றார்கள் அவர்கள்.



"இன்னும் ஒரு மணி நேரம்தான் நீங்கள் வாழ்வீர்கள் அந்த ஒரு மணி நேரத்தில் என்ன செய்வீர்கள்? பதில் சொல்லுகிறோம்" என்று கேட்டார்.

முதலாம் சீடன் "இறை வழிபாட்டில் கழிப்பேன்" என்றான்.

"தியானத்தில் ஆழ்ந்து விடுவேன்" என்றான் இரண்டாம் சீடன்.

"பெற்றோர்களைக் கவனிப்பதில் செலவிடுவேன்" என்றான் மூன்றாம் சீடன்.

"நீங்கள் மூவருமே புனிதமானதைச் சொன்னீர்கள்" என்று பாராட்டினார் குரு.

அவர்களில் ஒருவன் "குருவே! உங்களுக்கு ஒரு மணி நேரம்தான் வாழ்வு என்றால் என்ன செய்வீர்கள்?" என்ற கேட்டான்.

"எப்போதும் இருப்பது போல இருப்பேன். என்னிடம் எந்த மாற்றமும் இருக்காது. வாழ்க்கையின் எல்லாக் கூறுகளும் புனிதமானவை" என்றார் அவர்.

## வாழ்வினிலே வளம் காண – வேதாத்திரியம்.

"வாழ்வினிலே வளம்காண, வினை உயிர்மெய்
வகையறிய, பகல் இரவாய் எண்ணி எண்ணி,
ஆழ்ந்தாய்ந்து சிந்தித்தேன். அறிவின் போக்கு
அகன்றாழ்ந்து, அதன்மூலம் முடிவுமான
பாழ்நிலையை யெய்தியது. பரம ஆட்கொள்ள
பலப்பலவாம் வினாக்களெல்லாம் விடையா யிற்று.
ஊழ்உணர்ந்தேன், உயிருணர்ந்தேன், வினையுணர்ந்தேன்,

உயர்தொண்டில் மனநிறைவும் மகிழ்வும் கண்டேன்.” (ஞாக.பா.727)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 41.குரு நம்பிக்கை எதையும் செய்யும் (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஊரில் ஏழை உழவன் ஒருவன் இருந்தான். எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தான். துறவி ஒருவரிடம் சிடனாக வேண்டும். அவர் உள்ளம் மகிழும்படி நடந்து நல்ல நிலையை அடைய வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது.

தன் எண்ணத்தைத் தெரிந்தவர்களிடம் எல்லாம் சொன்னான்.

அவர்கள் எல்லோரும் தொலைவில் இருந்த ஒரு துறவியின் பெயரைச் சொன்னார்கள். அவரிடம் அறிவுரை பெற்றால் நல்ல நிலையை அடையலாம் என்றார்கள்.

பல நாட்கள் பயணம் செய்த அவன் துறவியின் குடிலை அடைந்தான்.

அவரின் திருவடிகளில் விழந்த அவன் “குருவே! நீங்களே எனக்கு எல்லாம். நீங்களே எனக்கு கடவுள். என்னைச் சீடனாக ஏற்றுக் கொள்ள வேண்டும். நீங்கள் என்ன சொன்னாலும் செய்கிறேன். உங்களுக்குத் தொண்டு செய்வதே இனி என் கடமை” என்று கண்ணீர் மல்க வேண்டினான்.

“என்னை எப்போது முழுமையாக நம்பினாயோ நீ நினைத்தது எல்லாம் நிறைவேறும்.

என் பெயர்தான் இனி உனக்கு மந்திரம்.

அதைச் சொன்னால் போதும்.

உனக்கு வரும் துன்பங்கள் அப்போதே நீங்கி விடும். முழுமையான நம்பிக்கை எதையும் செய்யும்" என்றார்.

மீண்டும் அவரின் திருவடிகளில் விழுந்து வணங்கி விடை பெற்றான் அவன்.

சிறிது நேரம் சென்றது. துறவியின் சீடர்கள் சிலர் பரபரப்படன் அவரிடம் வந்தார்கள். "குருவே! உங்களிடம் வாழ்த்துப் பெற்றுச் சென்றவன் தண்ணீரில் நடந்து செல்கிறான். இந்த அதிசியத்தை எங்களால் நம்ப முடியவில்லை" என்றார்கள்.

"நீங்கள் சொல்வதை என்னாலும் நம்ப முடியவில்லை. உண்மையா என்று பார்ப்போம்" என்று அவர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

அவரிடம் வாழ்த்துப் பெற்றுப் புறப்பட்ட அவன் தண்ணீரின் மேல் நடந்து செல்வதைப பார்த்தார்.



இந்த அசிசயத்தை அவராலேயே நம்ப முடியவில்லை.

சீடர்களைப் பார்த்து "அவனை அழையுங்கள்" என்றார்.

சீடர்கள் குரல் கொடுத்தார்கள்.

குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் அவன். கரையில் குரு நிற்பதைப் பார்த்து தண்ணீரில் மேல் நடந்து கரைக்கு வந்தான்.

குருவின் திருவடிகளில் விழுந்து வணங்கினான்.

"எப்படி தண்ணீரின் மேல் நடந்தாய்? இந்த அதிசியத்தை உன்னால் எப்படிச் செய்ய முடிந்தது?" என்று கேட்டார்.

"குருவே! எல்லாம் உங்கள் பெயரின் மகிமைத்தான். உங்கள் பெயரைச் சொல்லிக் கொண்டு தண்ணீரின் மேல் நடந்தேன். எனக்கு வேற எதுவும் தெரியாது" என்றான் அவன்.

என் பெயருக்கே இவ்வளவு மகிமை இருந்தால் எனக்கு எவ்வளவு மகிமை இருக்கும்? என்னாலும் தண்ணீரின் மேல் நடக்க முடியும் என்று நினைத்தார் அவர்.

தண்ணீரின் மேல் நடக்க முயற்சி செய்தார். நடக்க முடியாமல் தண்ணீருக்குள் விழுந்து விட்டார்.

சீடர்கள் பரபரப்புடன் அவரைத் தூக்கி விட்டார்கள்.

தண்ணீரின் மேல் நடந்தவன் "குருவே! உங்கள் பெயரைச் சொல்லி என்னால தண்ணீரின் மேல் நடக்க முடிந்தது, உங்களால் முடியவில்லையா?" என்று கேட்டான்.

தலை கவிழ்ந்த அவர் "என் பெயர் எதையும் செய்யும் என்ற முழு குரு நம்பிக்கை உனக்கு இருந்தது. உன் குரு நம்பிக்கை பொய்யாகவில்லை. அந்த நம்பிக்கை எனக்கு இல்லாததால் தண்ணீரில் விழுந்து விட்டேன். இனி நீதான் என் குரு எதைச் செய்தாலும் நம்பிக்கையுடன் செய்வேன்" என்றார் அவர்.

"தப்பாது குருவுயர்வு மதிப்போர் தம்மைத்
தரத்தில் உயர்த்திப் பிறவிப்பயனை நல்கும்," (ஞாக.பா.10)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

# Youtube channel

# Vethathiriam Banukumar

1 எண்ணமற்ற நிலை https://youtu.be/AO0_s9z-vos
2. எதிலும் மகிழ்ச்சி https://youtu.be/OE0A1zQpLoU
3. துறவிக்கு கோமாளி கற்றுத்தந்த பாடம்! https://youtu.be/Lf9vTtns6-I
4. மன அமைதி பெற https://youtu.be/0fF_-b--u2E
5. ஆடைக்காக மரியாதை? https://youtu.be/DhZIjuI4jZs
6. உழைத்து முன்னேறு https://youtu.be/vw9xEgx_hxY
7. நன்மையே நோக்கு https://youtu.be/30DIfU3x-h0
8. அங்கிருந்து நுழை https://youtu.be/eFgp41XMaAE
9 .ஜென்னும் தேநீரும் https://youtu.be/VvoiLRKEvbI
10. மனோதிடம் வேண்டும் https://youtu.be/wNT5DGtNki4
11. இறைவனுக்கு பலி கொடுக்கலாமா? https://youtu.be/BB4VWDcMbTk
12. அகங்காரம் போனால், மகிழ்ச்சி கிடைக்கும்! https://youtu.be/jaX7eZHMszo
13. பூட்டாத பூட்டு https://youtu.be/ki8fZgTJFJQ
14. அனுபவமே குரு https://youtu.be/6U2XLua401Y
15. கற்றதும் பெற்றதும் https://youtu.be/mmPyIybzSmk
16. யார் சிறந்தவர்? https://youtu.be/gQDm38e8n5w
17. மழையாக பொழிந்த மலர்கள் https://youtu.be/nUSFbFxzcbE
18. ஞானோதயத்தின் கதை https://youtu.be/JwBJHwbrJ8Q
19. குரு பதவி https://youtu.be/2j1StBfEHnA
20. கை உணர்த்திய கதை https://youtu.be/BJG0vyDNaPg
21. இந்த நாள் மீண்டும் வராது https://youtu.be/MQDMZu7ESng
22. வாழ்க்கை வாழ்வது எப்படி? https://youtu.be/WztJN1UAo38
23. பேரலைகள் https://youtu.be/35nVnmEBIE8
24. ஒரு ஆசை ஒரு பாடம் https://youtu.be/OwSkUz7_1W0
25. மனநிறைவாக வாழ என்ன செய்ய வேண்டும்? https://youtu.be/l66uqFHdhI0
26. மக்களா? சூத்திரமா? https://youtu.be/oxr75chb0-Q

27. அதிர்ச்சி இல்லாமலா? https://youtu.be/91tVrf99GLU
28. ஞானம் பெறும் ஆர்வம் https://youtu.be/9fGiS0sW-S4
29. தன்னை அறிதல் https://youtu.be/o9MDH0NkiMk
30. இயல்பாய் இருத்தல் https://youtu.be/JoL5h76_FAE
31. யார் முன் நிற்கிறாய்? https://youtu.be/JrHr5jXKAD8
32. நல்ஒழுக்கமும் நன்மையும் https://youtu.be/9gAQ0ZYJuwE
33. எந்த வழியில் வந்தாலும் https://youtu.be/osgSkZ2MPMo
34. இயற்கை அழகே அழகு https://youtu.be/4CL-3ktnCUA
35. ஞானம் பெற்ற பின் https://youtu.be/vSIggPwXO1Y
36. அச்சத்திற்கு என்ன காரணம்? https://youtu.be/Jh-d1lqX23U
37. குருவின் அன்பு அடிப்பதா? https://youtu.be/QCZ2ADofXH8
38. அழிப்பதுதான் வலிமையா? https://youtu.be/OpOjHIXuEZk
39. கருவான நாதவிந்தில் சாதியேது? https://youtu.be/MmM0XIWXRc
40. வாழ்வினிலே வளம்காண https://youtu.be/_i6TuIUBHqk
41. குரு நம்பிக்கை எதையும் செய்யும் https://youtu.be/eApQVohoUMY

## துணைநின்ற நூல்கள்


1. ஜென் கதைகள், இணையதளம்
2. ஞானக்களஞ்சியம் பாகம் 1 & 2, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. ஞானமும் வாழ்வும், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
4. மாக்கோலமாய் விளைந்த மதி விருந்து, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, பாகம்1.2.3. விஜயா பதிப்பகம், கோவை.
6. ஞானம் தரும் ஜென் கதைகள், அம்பிகா சிவம், கிளாசிக் பப்ளிகேஷன்ஸ், சென்னை.
7. ஜென் கதைகள், ஏ.சோதி, நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி
8. ஜென் கதைகள், உதயதீபன், மீனாட்சி பதிப்பகம், சென்னை
9. உலக சமாதானம், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
10. Zen Stick – karn Rahul - Kindly Store
11. Tanya’’s Collection Of Zen Stories – Schmid Tanya

# ஆசிரியரின் பிற நூல்கள்

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)

4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்

9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே

## திருவாசகமும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.

10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

1. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

## vethathiriam banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 106 தலைப்புகளில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.

29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்கோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2

64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்

99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்